HAMSA SANDESA

OF

SRI VEDANTA DESIKA

(SANSKRIT TEXT)

ஹம்ஸ ஸந்தேசம்

Translated into Tamil

BY

VAIDYARATNA

PANDIT M. DURAISWAMI AIYANGAR

Ayurveda Bhushan, Ayurvedacharya

Desikadarsna Dhurandhara

THE VAIDYA KALANIDHI OFFICE

VEPERY — MADRAS

(Price 12 annas)

ரஸ்ம ஸந்தேசம்

ஸ்ரீ நிகமாந்த தேசிகன் அருளிச் செய்த

ஸம்ஸ்க்ருத மூலமும்

வைத்திய ரத்னம்

பண்டித மே. துரைஸ்வாமி ஐயங்கார்

ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்ய

தேசிக தர்சந துரந்தர

அவர்கள் இயற்றிய

தமிழ் மொழிபெயர்ப்பும், உரையும், முகவுரையும்

அடங்கியது.

வைத்திய கலாநிதி ஆபீஸ்

வேப்பேரி

மதராஸ்.

1941

முகவுரை

உலகவாழ்க்கையை ஸம்ஸாரம் என்பார்கள். இச்சம்ஸார வாழ்க்கையை உற்றுப் பரிசீலனை செய்தால், அதில் உண்மைச் சுகம் இல்லை யென்பது வேதாந்திகளின் கொள்கை. போன்ப மல்லாததை உலகில் இன்பமாகக் கருதி வாழுபவர் பெரும் பான்மையரே. இப்பெரும்பான்மையோர் பலவகைத் துன்பங் களுக்கிடையில் ஒருவாறு உலகில் உயிர்வாழ்கிறார்கள். அத் துன்பங்கள் தம் உடலைப்பற்றியும், உள்ளத்தைப்பற்றியும், உற்றார் உறவினரைப்பற்றியும், பொருளின்மையைப்பற்றியும் ஆகப் பல காரணங்களை ஆதாரமாகக்கொண்டு உண்டாகின்றன. இத்துன்பங்களைத் தூர விலக்கி உயிர்வாழ விவேகிகளுக்கு உலகில் இரண்டு உபாயங்கள் உண்டென்று சான்றோர் கூறுவர். 'நன்மைக்கு மாறுக நஞ்சு குணம் பொருந்திய இல்வாழ்க்கை யாகும் மரத்தில் மனிதர் இருவகைக் கனிகளையே இனியவை யெனக் கருதி யனுபவிக்கக் கூடும்; அவற்றுள் ஒன்று அமுதம் போன்ற காவ்யங்களின் அருஞ்சுவை; மற்றொன்று மேன் மக்களுடன் கூடிப் பழகுதல்' என்பது அவ்வுபாயங்களைப்பற்றி வடமொழியிலுள்ள ஒரு முதுமொழியின் மொழிபெயர்ப்பாகும்.[1] உயரறிவு படைத்தோர் உலகத்திலுள்ளவற்றை உள்ளபடி யுணர்ந்து இவ்வுலக இன்பத்தை இன்பமாகவும், துன்பத்தைத் துன்பமாகவும் பாராட்டாது அவற்றினிடம் வளையிருந்து வாழ்வர். ஆதிகாலத்திலும் சரி, இக்காலத்திலும் சரி அறிவாளரிற் பலரும் அநேக இன்னல்களுக்கும் வறுமைக்கும் குடிபுகும் இடமாயிருப்பது வழக்கம் என்பது உலகறிந்த உண்மை; ஆயினும் அன்னார் அந்நிலைமையைச் சிறிதும் சிறுமையாகக் கருதாது இனிது இவ்வுலகிற் காலங்கழித்துப் புகழும் பெற்று, முடிவிற் போன்ப

---

1. ಸಂಸಾರವಿಷವೃಕ್ಷಸ್ಯ ದ್ವೇ ಏವ ರಮ್ಯೇ ಫಲೇ।
காவ்யாம்ருதரஸாஸ்வாதஃ ஸஜ்ஜனை: ஸஹ ஸங்கமஃ ॥

மடைந்தனர் எனப் பெரியோர் கூறுவர். அதற்குக் காரணம் அவர் பெற்றிருந்த கல்விப்பெருக்கேயாகும். தன்பங்களைத் தூரும்பாகக் கருதி கல்வித் துறையில் காவ்யமென்னும் நூற் சுவையாகும் அமுதத்தில் அவர் மனம் அனவரதமும் ஆழ்ந்து, அவ்வானந்தத்தில் ஈடுபட்டு வரும். காவ்ய மென்றால்—சொற்சுவை பொருட்சுவைகள் அடங்கி இரஸமயமாகவேயுள்ள வாக்கியங்களாலான தே காவ்யம்' என்று[1] காவ்ய தத்துவமறிந்தோர் கூறுவர். உலகிற் பலரை வாட்டும் பொருளின்மையையோ, உடலை வாட்டும் நோய்களையோ, உள்ளத்தை வாட்டும் வேதனையையோ ஆதாரமாகக்கொண்டு உண்டாகும் துன்பமெதுவும் நமது தூப்புற் பிள்ளையாம் வேதாந்த தேசிகனது தூய்மையான தேஹ—மனோ நிலைமைகளுக்கு எச்சமயத்திலும் எச்சங்கடமும் இழைக்க வியலாமற் போயிற்றென்று அவரது திவ்ய சரிதத்தையறிந்த அனைவரும் அறிவர். மேலும் உயர்வான தம் உயிர்வாழ்க்கைக்கு உஞ்சவ்ருத்தியையே உற்றதோர் உபாயமாகக்கொண்டு, உத்ஸாஹநூன்றுதே வேதநூற் பிராயம் நூறையும்—அதற்கும் மேலான ஆயுளையும்—பெற்று ஆனந்த பரவசராக அவர் ஆயுளைக் கழித்தார் என்பதும் அவரது உண்மைச் சரிதம். இதற்கெல்லாம் காரணம் பெரும் பொருளா? புஷ்டி யளிக்கும் அநேக வகை அறுசுவை யுணவா? போகங்கள் மிகுந்த இல்வாழ்க்கையா? இல்லை. அவரது பளிங்குபோல் பரிசுத்தமான நடத்தையும், மாசற்ற மனப்போக்கும், பகவத் பக்தியும், கவிபாடி அரிய நூல்களியற்றிக் கல்வி யென்னும் அமுதக்கடலில் அமிழ்ந்து அச்சுகானுபவத்தில் ஈடுபட்டிருந்ததும், மேன்மக்களோடு மேன்மேலும் உறவாடி வந்ததும் ஆக இவையே அவரது ஆரோக்கியத்திற்கும், தீர்க்காயுளுக்கும், ஆனந்தத்திற்கும் அரிய இரஸாயன மாயிருந்தன.

விஷயங்களின் மேன்மை தாழ்மைகளைப் பொருட்படுத்தாது தேசான்மீயவாறு ஏதேதனும் ஒரு வரலாற்றைப் பற்றி காவ்யம் இயற்றுவது மஹாகவிகளுக்குப் பொருந்தாது என்று[2] ஸாஹித்ய

---

1. 'வாசூ்ய ஸஹாதூ்ரூ காவ்யூ்' இதி விஷ்வநாத:.
2. காவ்யூ்ர ஔசொ்ஷூ வஜூ்ரியரூ—இதி.

இலக்கண நூல்கள் வரையறுத்திருப்பதை முற்றிலும் பின்பற்றியவர் பூரீகவிதார்க்கிகவிஹ்றமமே. வேறு மஹாகவிகளைவிட வேதாந்த தேசிகனே காவ்ய மியற்றும் வகையைக் சாலோடு தலை முற்றிலும் சீர்படுத்தியவர் எனவும் சிறிதும் ஐயமின்றி மொழிக்திடலாம்; காவ்யரஸாணுபவத்திலும் அவரைப்போல் மற்றெவரும் ஈடுபட்டதில்லை யென்றும் அறவே கூறலாம். முன் குறிப்பிட்டது போல் 'காவ்யம் ரஸாத்மகம்' என்றும், ஆகவே காவ்ய ரஸாணுபவத்தைக் கரும்புண்பதற்குச் சமமென்றும் கல்விமான்கள் கருதுவர். ஸாதாரண மனிதர்களை அல்லது விஷயங்களைப்பற்றிய மஹாகவிகளது காவ்ய நூல்களும் கரும்பு போன்றிருக்குமென்பது உண்மையே. ஆனால் நிகமாந்த தேசிகன் நியதமாகவே எதிலும் ஸாரதமத்தையே கிரஹிப்பது வழக்கம்.[1] சக்கை நீக்கிய சுத்தமான கருப்பஞ்சாறுபோல் இனிய இரஸமாகவே யுள்ள பகவானைப் பற்றிய[2] காவ்யமே தெள்ளிய கருப்பஞ்சாறு போன்றதாய் மற்றக் காவ்யங்களினும் மாசற்றதும் மேன்மையுற்றதுமாகுமன்றே? இரஸஸ்வரூபமாகவே போக்யரூபுள்ள பகவானைப்பற்றி சொற் சுவை பொருட் சுவைகளுடன் இயற்றப்பட்ட காவ்யமும் இரஸமயமாகவே இருக்குமாகையால், அது பொன்மலருக்கு நறுமணமும் சேர்ந்தாற்போல் அதை அநுபவிப்பவரது மனதுக்கு மட்டில்லா மகிழ்ச்சி தருவதாகுமல்லவா? தேசிகன் தேனில் மலர்களின் மணமும் ஹரமணத்ததும், மலர்களில் மகரந்தச் சுவையையும் இனிது ஒன்றுசேர்த்து, அவற்றின் நிகரில்லாக்குணத்தை உலகத்தோருக்கு ஊட்டச் சருதியே, பகவத் குணங்களையும் வேதாந்ததத்துவங்களையும் காவ்யங்களில் அருஞ் சொற்களினூடே அமைத்தும்[3],

---

1. கூஹாரஜ ஹூஹாரம் ஹ ஹாரம் ஹாரதரம் தரஜஜ।
ஹஜஜஜ ஹாரதம் ஹாரஹூ ரநீாகூர ஹவாரீ தழ॥

2. ரஹஸ்ய ஸெவ ஹஃ—ஹதி ஸ்ரூதிஃ।

3. ஹம்ஸஸந்தேசம், யாதவாப்யுதயம், பாதுகா ஸஹஸ்ரம், ஸங்கல்பஸூர்யோதயம் முதலியவை பகவத்விஷயங்களையும், வேதாந்ததத்துவங்களையும் உள்ளடக்கிய உயர்தர ஸாஹித்ய நூல்களாம்.

காவ்யங்களின் சுவைகளை வேதாந்த நூல்களிலும் பகவத் விஷயமான கிரந்தங்களிலும்[1] வெகு இனிதாக மாற்றி இணைத்தும் இம்மை மறுமைகளில் இன்பம் பெற விரும்புபவருக்கு இன்றியமையாத இணையற்றதோர் கவிமுறையைக் கற்பித்திருக்கிறார் என்ற பகுத்தறிவுடன் அவர் நூல்களைப் பரிசீலனை செய்து படிக்கும் பண்டிதர் இல்லாமற் போகார்.

அவ்விஷய மிருக்கட்டும். ஸந்தேசகாவ்யங்களுள் ஸகல விதத்திலும் முதன்மை பெற்றதான மேகஸந்தேசம் இருக்கையில் அதைப்போன்ற வேறொரு ஸந்தேசகாவ்யத்தை இவர் என் இயற்ற வேண்டும் என்கிற கேள்வி ஸாதாரணமாகப் படித்த வகுப்பாருக்கிடையிலேயே எழுவதுண்டு. அடியிற் கூறப்படும் ஸமாதானம் அவர்களுக்குத் திருப்தி யளிக்கும் என்று எண்ணுகிறோம். நிகமாந்ததேசிகன் காளிதாஸனது காவ்யங்களில் நிகரில்லாக் கௌரவம் வைத்தவர். இதற்கு அவர் இரகுவம்சத்தை அணுகித்து யாதவாப்யுதயத்தையும், மேகஸந்தேசத்தைப் பின்பற்றி ஹம்ஸஸந்தேசத்தையும் இயற்றியதே போதிய சான்றாம். ஸந்தேசகாவ்யங்களைப் பற்றிய மட்டிலும் மேகஸந்தேசம், ஹம்ஸஸந்தேசம் ஆக இரண்டுமே ஸாஹித்யப் பிரபஞ்சத்திற் சாலவும் பிராபல்யமடைந்துள்ளவை. இரஸப்பெருக்கில் மிகுந்த ஆதி ஸந்தேச காவ்யமான மேகஸந்தேசம் இருக்கையில், ஹம்ஸஸந்தேசத்தைக் கவிதார்க்கிகஸிம்ஹமம் இயற்றியதற்கு இரண்டு மூன்று முகாந்தரங்கள் உண்டு. அவை பின் வருமாறு:—காவ்யரஸம் ஒன்று நீங்கலாக மேகஸந்தேசத்திலுள்ள மற்ற அம்சங்கள் மஹான்களான அறிஞர்களால் ஆதரிக்கக் கூடியனவல்ல வென்பது

---

1. வேதாந்த விஷயமான அல்லது வைஷ்ணவ ஸம்பிரதாய ஸம்பந்தமான எக்கிரந்தத்திலும் தேசிகனது செய்யுள் நடை காவ்யங்களில் இருப்பதுபோலே அநுப்ராஸம் முதலியதோடும், அர்த்த புஷ்டி—அலங்காராதிசளோடும் அழகாய் அமைந்திருப்பதை அவருடைய அதிக சாஸ்திரார்த்தங்களை விவரிக்கும் அதிகரணஸாராவளி, மீமாம்ஸாபாதுகை, இரஹஸ்யத்ரய ஸாரத்திலுள்ள பத்திகள், தசாவதார ஸ்தோத்ரம், தயாசதகம் முதலிய அநேகமும் அரிய கிரந்தங்களிற் படித்தறியலாம்.

விவேகிகளின் கொள்கை. முற்கூறியபடி காவ்யாலாபம்[1] கூடாதென்பது சான்றோர் கருத்து. மேகஸந்தேசத்தில் ஊர் பெயர் இல்லாத ஓர் இயக்கன்[2] கதாநாயகனைக் கூறப்பட்டிருக்கிறான். தூது அனுப்புவதற்கோ அசேதனம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது; அது உயிரற்று உறுப்படியில்லாது ஆகாயத்தில் ஆவியாகப் பறந்து மறையக் கூடிய மேகம். மனோஹரமான காவ்யத்திற்கு மஹாபுருஷன் ஒருவனைக் கதாநாயகனாக அமைப்பதும், தூது அனுப்பும் வேலைக்கு உலகத்து அனுபவங்களைப் பின்பற்றி மனிதனையோ அல்லது அவனுக்கடுத்த வேறு பிராணிகளையோ தேர்ந்தெடுப்பதும் கவிகளின் முறை. அது காவ்யரஸத்தையும் அதிகரிக்கச் செய்யும், ஆகவே வேதாந்ததேசிகன் வேறு வகையில் காவ்ய மியற்றி, ஸந்தேசகாவ்யத்தைச் சீர்திருத்த முயன்றார். வம்சத்திலும், வல்லமையிலும், விஷ்ணுவின் அவதாரம் என்னும் விசேஷத்தாலும், வேறு குணங்களாலும் ஒப்புயர்வற்ற ஸ்ரீராமனைக் கதாநாயகனாகவும், பறவையினத்திற் பெருமை வாய்ந்த ஹம்ஸத்தைத் தூதனுப்பவும் அமைத்துச் சந்தேசகாவ்யத்திற்குச் சீரும் சிறப்பும் உண்டாகச் செய்த பெருமை ஸ்ரீவேதாந்ததேசிகனுக்கே உரித்தானது.

ஆனால் ஸ்ரீராமாயணத்தில் அடங்கிய ஹனுமத் ஸந்தேசத்தை உட்கருத்தாய் அமைத்து, ஹனுமான் ஸ்தானத்தில் மேகத்தைத் தூது வேலையில் அமர்த்தி மேகஸந்தேசத்தைக் காளிதாஸன் இயற்றியதாகச் சிலர் கூறுகிறார்கள்.[3] எதையேனும் ஒரு முக்கியமில்லாத விஷயத்தை ஆதாரமாகக் கொண்டு ஆதி காலத்திய மஹாகவிகள் ஒரு நூலியற்ற முயன்றாலும் அதில், மஹாபுருஷார்சனையை

---

1. காவ்யாலாபம்–மஹாபுருஷன் அல்லாத எவரேனும் ஒரு வஸ்துவைப்பற்றி தோன்றியவாறு காவ்ய மியற்றுவது.

2. கஶ்சித் கு யக்ஷः—என்று மேகஸந்தேச முதல் பத்தியம்.

3. இக்கொள்கையை வித்யுல்லதா வியாக்யானம் இயற்றிய பூர்ண ஸரஸ்வதி மறுத்திருக்கிறார். 'ஜநகதநயாஸ்நாநபுண்யோதகேஷு' என்றும், 'ரகுபதிபதரங்கிதம் மேகலாஸு' என்றும், 'இத்யாக்யாதே பவநதநயே மைதிலீ வோந்முகீ ஸா' என்றும்

வரலாற்றை உட்கருத்தாகவாவது அவசியம் அமைத்திடுவது முறை யாகக் கருதப்படுவதுண்டு. ஆகவே சான்றோர் உலக்கும் ஸீதாராம ஸம்பந்தமான விஷயத்தை உட்கருத்தாக வைத்து விப்ரலம்ப சிருங்காரரஸப் பிரதானமான[1] மற்றோர் கதையானது கவிஸார்வ பௌமனுல் மேகஸந்தேசத்தில் வர்ணிக்கப்பட்டிருக்க, கவிதார்க்கிக ஸிம்மம் அதற்கு நேர் மாறுக—அம்முறையைச் சீர்திருத்தக் கருதி—விப்ரலம்பசிருங்காரப் பிரதானமான மஹாபுருஷகதையை—ஸ்ரீராம சரிதத்தில் ஒரு பகுதியை—வெளிப்படையாக அமைத்து, மேகாந்த விஷயத்தை வியங்க்யார்த்தமென்னும் உட்சருத்தாகச் செய்து, ஹம்ஸஸந்தேசத்தைச் செய்தருளி, ஸகல விதத்திலும் இரஸமய மான ஸந்தேசகாவ்யமியற்றிய பெருமைக்குப் பாத்திரமானார். மேலும் 'ஜாதம் வம்சே புவநவிதிதே புஷ்கலாவர்த்தகானாம்'[2] என்கிற மேக ஸந்தேச வாக்கியத்தையே ஒரு சிறிது மாற்றி 'வம்சே ஜாதஸ் ஸவிதுரநகே'[3] என்று ஹம்ஸ ஸந்தேசத்தில் முதற் பத்தியத்தில் அமைத்ததோடு, அவ்விசேஷணத்தைச் சொல்லி மேகத்திற்கு விசேஷ மேன்மையைக் கற்பிப்பதினும், கதாநாயக னான ஸ்ரீராமனுக்கே—குற்றமற்றதான கதிரவன் குலத்தில் உதித்த என்கிற—அப்பெருமையைக் கூறுவது இன்னும் விசேஷமென்பது மாத்திரமல்ல, அது அவருடைய உண்மையான உயர்வைக் குறிக் கும் விசேஷணமுமாகுமெனக் கருதி அவ்விஷயத்தை நிகமாந்த குரு நிபுணமாக மாற்றி யமைத்தார். அல்லாமலும் 'என்னை மனித

அநேக விடங்களில் இராமாயண விஷயம் உபமானமாகக் கவியினால் விளங்கக் கூறப்பட்டிருப்பதால், உபமேயமாகக் கருதப்பட்ட மேக ஸந்தேசவிஷயம் வியங்க்யார்த்தமாகக் கொள்ளப்படமாட்டா தென்பது அந்த வியாக்யாதாவின் வாதம்.

1. விப்ரலம்ப சிருங்காரம்—ஸ்த்ரீ புருஷர்கள் விட்டுப் பிரிந் திருக்க நேரிடுகையில் இருவரும் பரஸ்பரப் பிரீதியை வெளியிட் டுப் பிரிவாற்றுமையாலான ஸங்கடங்களை விளக்கும் மனோபாவ நிலைமையைக் குறிக்கும் சிருங்காரம்.

2. "புவனத்தில் புஷ்கலாவர்த்த மென்னும் புகழ் பெற்ற மேகங்களின் குலத்தில் உதித்தது"—மேக ஸந்தேசம். (1–6.)

3. "மேன்மை தங்கிய சூரிய வம்சத்தில் அவதரித்தவர்"—ஹம்ஸ ஸந்தேசம். (1–1.)

ஏகமேவ நினைத்து நடந்துவருகிறேன்'[1] என்று இராமன் கூறியதாக ஆதிசவி அருளியபடி, அஸாதாரண வஸிலக்ஷண குணத்தைப்பெற்ற ஆதிபுருஷன் நமது கதாநாயகன் என்பதைக் குறிப்பாக எடுத்துக் காட்ட 'மானிடத் தன்மையை மேலாக மதித்து'[2] என்றும், 'இம் மண்ணுலகில் ஸாமான்ய மனிதருக்கிடையே நாமும் ஒருவராவோம்' என்றும்[3] கூறிவிட்டு, ஆஸல் இதைக்கொண்டு காளிதாஸன் கூறியுள்ள யக்ஷனைப்போல் உண்மையிலேயே பெயர் ஊர் இல்லாத ஏதோ ஒரு மனிதனைத் தம் கதாநாயகனைக் கருதிவிடலாகாதெனக் காட்டுவதற்காக, மஹாலக்ஷ்மியின் மணாளனை ஸர்வேச்வரனினும்[4] நமது கதாபுருஷன் வேறுபட்டவரல்ல வென்பதை முதற் பத்தியத்திலேயும், 'இக்ஷ்வாகு குலத்தினர் நினைத்தமாத்திரத்திலே உலகத்தையே உருமாற்றியமைக்கும் திறமை பொருந்தியவர்; இயற்கையிலேயே மேன்மையிற் சிறந்தவர்; அவ்வம்சத்தினரான எமக்கும்'[5] என்று அவருடைய வம்சபரம்பரையின் வரையறுக்க வியலாத விசேஷப்பிரபாவங்களையும் விளக்கி, ஸௌலப்யத்தி னால் சிறியவருக்கெல்லாம் சிறியவராகவும், மஹத்தான மேன்மை யினால் பெருமை வாய்ந்ததற்கெல்லாம் பெரியவராகவும் சொல்லி, 'அணோரணீயாந் மஹதோ மஹீயாந்' என்கிற வேதப்பிரதி பாத்யமான மாஹாத்மியம் பெற்று உலகில் ஒப்புயர்வற்றவர் தமது கதாபுருஷன் என்பதை நிகமாந்த தேசிகன் நன்கு விளக்கி யிருக்கிறார். மேலும் காளிதாஸன் மேகத்திற்குச் சஹாயமாக இராஜஹம்ஸங்கள் வருமென்று[6] மேகஸந்தேசத்திற் கூறியதைச் சிறப்பாக மாற்றியும் அமைத்திருக்கிறார்; அதாவது இராஜஹம்

---

1. ஸ்ரூயதாம் ஸாநுஷம் மிதம்—ஸ்ரீராமாயணம்.
2. ஸாநயாநு ஸாநுஷகுப்ஜ—ஹம்ஸஸந்தேசம். (1-1.)
3. மயைவ கேவலமயமிஹ ஸதி லோகலம் ஸாநுஷானாகுப்ஜ—ஹம்ஸஸந்தேசம். (1-7.)
4. லோகஃ ஸ்ரீஸாநு—ஹம்ஸஸந்தேசம். (1-1.)
5. ஹம்ஸஸந்தேசம் - ஆச். 1. ச்லோ. 8.
6. ராஜஹம்ஸாஃ ஸஹாயாஃ—மேகஸந்தேசம் (1-11)

ஸத்தைத் தூதனுகிய மேகத்திற்குச் சஹாயமாசக் கூறுவதைவிட, கதாநாயகனுக்கே அதைத் தூதனுப்பும் விஷயத்தில் ஸஹாயமாகச் செய்வது மேலெனக் கருதி, அப்பறவையரசைத் தூதனுக மாற்றி, தம் நூலுக்கும் ஹம்ஸஸந்தேசம் என்னும் அதன் பெயரை முதன்மையாக வைத்து இயற்றினர் என்று ஊஹிக்கவேண்டியிருக்கிறது.

மேலும் இரவிகர்களின் பொழுது போக்குக்கு உபயோகமான முறையில் மேகஸந்தேசம் அமைந்துள்ளது. ஹம்ஸஸந்தேசமோ ஸ்ரீதேவியின் அவதாரமான ஸீதாபிராட்டியினுடையவும்[1], ஸ்ரீமஹாவிஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீராமபிரானுடையவும் திவ்ய சரித மடங்கியதாகையால், இது காவ்யத்திற்குக் காவ்யமாசவும்,[2] ச்ரேயஸ் என்கிற இம்மை மறுமைகளிற் கிடைக்கக் கூடிய பெரும் பேறுகளைப் படிப்பவருக்கு அளிக்கும் அருமைக் கிரந்தமாகவும் கருதப்படுமென்று வேதாந்த தேசிகனே வெளிப்படையாகக் குறிப்பிட்டிருக்கிறார்.[3] சில காலம் பிரிந்திருந்த ஸீதையும் ஸ்ரீராமனும் மீண்டும் சேருவதற்கு அனுகூலம் செய்வது இந்நூல் என்பதைக் குறிக்கும் வியாஜமாய், ஸம்ஸாரக் கடலினிடையில் அகப்பட்டு நெடுநாளாகத்

---

1. யெஷு ஸ்ரீயோ ஹவதி (2–31) என்கிற பத்தியத்தையும் அதன் மொழி பெயர்ப்பையும் பார்க்கவும். (ஸ்ரீதேவிக்கும் ஸீதா தேவிக்கும் இலக்ஷணங்களில் முற்றிலும் ஒற்றுமை யுண்டு என்று நிரூபிக்கப்படுகிறது).

2. காவ்யரஸத்திற்குத் தேவையான ச்ருங்காரத்திற்கு நிதியாகவும், ச்ரேயஸ்ஸுக்கு (பெரும் பேறுகளுக்கு) அதிஷ்டான தேவதையாகவும் உள்ள ஸீதையைப்பற்றி விவரிக்கப்பட்டிருக்கிறது. (2–10 பத்தியம் பார்க்க.)

3. நூலின் கடைசிப் பத்தியத்தில் தம்முடைய மற்றக் கிரந்தங்களிற் கூறப்பட்டிருப்பதுபோலவே இந்நூலிலும் இக்கிரந்தத்தின் பலச்ருதி 'ஸ்ரேயஸாம் பதவீ ஸேதும்' (பெரும் பேறுகளை அடைவதற்கு அருமைக் கருவியானது) என்று குறிக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

தவிக்கும் நம் போன்ற பக்தர்கள் ஸீதா-ராமர்களென்கிற திவ்ய தம்பதிகளின் திருவடிகளைச் சேருவதற்கு இந்நூல் அனுகூலம் செய்யும் என்று அதே சொற்களால் அழகாக விளக்கியிருக்கிறார் நிகமாந்தகுரு. ஸீதாதேவியினிடம் ஸ்ரீராமன் பிரிவாற்றுமையினால் ஹம்ஸத்தைத் தூது அனுப்பும் பாவனையினால் அப்பிராட்டியினிடம் பக்தியை விளக்க இக்காவ்யம் எழுதியதுபோல், ஸ்ரீதேவியினிடமும் பெரும் பக்தி பாராட்டி, ஹம்ஸஸந்தேசத்திற்குள்ள அதே மந்தாக்ராந்தாவ்ருத்தத்திலேயே ஸ்ரீஸ்துதியின் பத்தியங்களையும் செய்தருளி, ஸீதாதேவி - ஸ்ரீதேவிகளின் பஜனையால் ஒரே சீரான சீர்மையை நாம் பெறுவோமென்று நமக்கு ஸ்ரீவேதாந்த தேசிகன் ஒருவாறு அறிவித்திருக்கிறார். "அப்போஜாநா முகஸ்வி மிஷதாமந்த ரங்கை ரபாங்கை:", "தந்வீ துங்கஸ்தநபரநதா தப்தஜாம்பூநதாபா", "அம்ருதலஹரீலப்தஸப்ரஹ்மசர்யை:" என்கிற ஸ்ரீஸ்துதி வசநங்கள் ஹம்ஸஸந்தேசத்திலும் எடுக்கப்பட்டிருப்பதையும், "ஸ்ரீதேவி ஆவிர்ப்பவித்தது பாற்கடலிலா அல்லது யாகபூமியிலா" என்று[1] ஸ்ரீஸ்துதியில் ஸ்ரீதேவியின் உற்பவத்தைப்பற்றி உள்ளதிற் சலவரமுறுவதுபோல் ஸ்ரீதேசிகன் கூறியிருப்பதையும் உற்றுப் படிப்பவர் இந்நூல்களிரண்டும் ஒரு சீராக இம்மை மறுமைகளில் இன்பம் பெற விரும்புபவருக்கு அனுகூலமானவை யென்று அறியலாம். மேலும் ஹம்ஸஸந்தேசத்தின் முடிவுரையான பத்தியத்தில் அக்கிரந்தம் இஹ-பரஸுகஸாதகம் என்று குறிப்பிட்டதுபோல், ஸ்ரீஸ்துதியின் முகவுரையான முதல் பத்தியத்திலேயே "இம்மையிலும் மறுமையிலும் பெருமை பெற விரும்பும் ஜனங்களுக்குப் பெரும் பேறுருவாகவே இருக்கும் ஸ்ரீதேவி"[2] என்று மொழிந்திருப்பதால், இவ்விருக் கிரந்தங்களையும் படிப்பவருக்குப் பலன் ஒரே விதமென்று குறிக்கப்பட்டிருப்பதாயும் கூறலாம்.

---

1. க்ஷிரோததேஃ கந்யகாஜநயா வஸ்துநே வாவி யஸ்யாஃ- ஸ்ரீஸ்துதிஃ।

2. "பூதகுஹ்யா நாமஸ்யவிகஃஹிதப்ராயி நீ நாம ப்ரஜாநாம் ஸ்ரேயோ ஃதி....." ஸ்ரீஸ்துதிஃ।

விப்ரலம்பச்ருங்காரமயமாக இந்நூலை யியற்ற முயன்ற வேதாந்ததேசிகன் ஸீதா-ராம விஷயமாயுள்ள புனிதமான வரலாற்றை அதற்கு ஆதாரமா யெடுத்துக்கொண்டதோடு, வேதாந்த விஷயமான சில ஸாராம்சங்களையும் அதில் அடக்கிக் கூறுவது இச்சிறு கிரந்தத்தை இன்னும் மேன்மையுறச் செய்யுமெனக் கருதி, இந்நூலை இரஸமயமாகவே செய்திருக்கிறார் என்று முன்பு குறிப்பிட்டிருக்கிறோம். பகவானிடம் நாம் பக்திபுரஸ்ஸரமாக மனதைச் செலுத்திய பிறகு வேறெங்கும் நமக்குப் பிரவ்ருத்தி யிருக்கலாகாது என்கிறகொள்கையை ஸாஹித்யவல்லோரான ஸாம்ஸாரிகர்களுக்கு அறிவிக்கக் கருதி, மன்மதனது செயலால் பதி-பத்னிகளுடைய மனதிலேற்படும் மஹத்தான நிலைமாறுபாட்டையும், நிர்விசல்ப ஸமாதி யென்னும் நிகரற்ற யோக நியமத்தையும் உபமாநோபமேய பாவனையில் சிலேஷமுகமாக விளக்கி யிருக்கும் விஷயம் (ஆச் 2-ச்லோ. 22) விவேகிகளுடைய கவனத்தைக் கவர்ந்திழுக்கு மென்று இச்சந்தர்ப்பத்திற் குறிப்பிடவும் பொருந்தும். முதல் ஆச்வர்ஸத்தில் 54-ம் பத்தியத்தையும் கூர்மையாகப் படித்துப் பாருங்கள். "பிரணவமே வில்; ஜீவாத்மாவே அம்பு; பரப்பிரஹ்மமே அதற்குக் குறி; ஆசாரியன் உபாயத்தைக் கொண்டு அஜ்ஜீவாத்மா என்னும் அம்பை வெகு ஜாக்கிரதையுடன் பரமாத்மாவைக் குறி வைத்துப் பிரயோகிக்க, அது அவனிடம் சென்று ஸாயுஜ்யமடையும்" என்கிற[1] ச்ருதிவாக்கியத்தின் முழுக்கருத்தும் அந்தப் பத்தியத்தில்

---

1. ப்ரணவோ தநுஃ ஶரோ ஹ்யாத்மா ப்ரஹ்ம தல்லக்ஷ்யமுச்யதே। அப்ரமத்தேந வேத்தவ்யம் ஶரவத் தந்மயோ பவேத்॥ இச்சுருதி வாக்கியத்தையே தேசிகன் இவ்வாறு வேறோரிடத்தில் விவரிக்கிறார்:—

ப்ரணவோ தநுஃ ஶரோ ஹ்யாத்மா ப்ரஹ்மைவாக்ஷ்யுச்யதே
அப்ரமத்தேந வேத்தவ்யம் ஶரவத் தந்மயோ பவேத்। ஶிக்ஷயேவ
ஹ்யாசார்யஸ்தம் ப்ரதிபாதயதி। ஶிக்ஷயா ஹ்யாசார்யோ
ஜீவாத்மாநம் ப்ரணவேந தநுஷா ஸந்தாநேந ஶரவத் தந்மயோ
பவேத்। ஶிக்ஷயேத்யுக்தம் ஶ்ரோத்ரியத்வம் நிரூபிதம்
கர்மஜ்ஞாநாப்யாம் நிஷ்பாபத்வம் ஸம்பாதிதம் ப்ரஹ்மவித்
ஹ்யேவ பவதீத்யுக்தம் ஸ ஹ்யவித்வாந் ஶ்ரோத்ரியோ
ப்ரஹ்மநிஷ்ட இதி॥ ஸங்கல்ப ஸமநியாயேந॥

பிரதிபலிக்கின்றது. மேலும் இப்பத்தியத்துடன், ஸ்ரீதேசிகன் மற்றொருநூலில் மொழிந்துள்ள பத்தியத்தின் கொள்கையைச் சீர் தூக்கிப் பார்ப்பதும் உசிதமாகும். அதாவது—"நமது உடலே ஸம்ஸாரக்கடலுக்கு இடையில் இருந்துவரும் இலங்காபுரியாம். ஞானேந்திரிய-கர்மேந்திரியங்களென்னும் பத்து முகங்களைப் பெற்று மஹா கர்வம் படைத்த மனதென்னும் மாய ராக்ஷஸனுக்கு அதீனமானது அவ்வுடலென்னும் இலங்காபுரி. இதில், இலங்கையிற் சிறை புகுந்த ஸீதாபிராட்டிபோல், பகவானுடைய சேஷபூதனான ஜீவாத்மா அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருக்கிறான். ஸ்ரீராமனுடைய குணங்களை உள்ளபடி யறிந்த ஹனுமான் தன்னைக் காப்பதற்கு ஸ்ரீராமன் தருணம் பார்த்துவருவது நிண்ணம் என்று ஸீதைக்கு அறிவித்து விச்வாஸமுண்டாக்கியதுபோல், தத்துவார்த்தங்கள் உணர்ந்த ஸத்குருவினால் மஹாவிச்வாஸம் உண்டாக்கப் பெற்ற ஜீவன்—ஸீதை இராமனை யடையத் துடித்துக் கொண்டிருந்ததுபோல்—பகவானுடைய திருவடிகளைத் தரிதமா யடையப் பேரவா கொண்டிருப்பன்" [1] என்றவாறு. இக்கொள்கை யை உட்கருத்தாய் அமைத்தே நிகமாந்தகுரு ஹம்ஸ ஸந்தே சத்தை இயற்றியிருக்கிறார் என்பதை இதைப் பகுத்துணர்ந்து படிப்பவர் அறியக்கூடும். இவ்வித இரஹஸ்யார்த்தம் அடங்கிய ஆரம்ப பத்தியங்களில் ஒன்றை மாத்திரம் இங்கு மீண்டும் திருஷ்டாந்தமாக விளக்கிக் காட்ட விரும்புகிறேன். இக்கிரந்தத்தில் இரண்டாம் பத்தியத்தைப் பரிசீலனை செய்யுங்கள். இருதய கமலத்தை மனதுக்கு ஸ்தானமென்று யோகிகளும் பிறரும் கூறுவர்; சுத்த ஸத்வகுணமுள்ள மனதை இராஜஹம்ஸத்திற்கு

---

1. ஏவொஃஏஜஃஜொஸாந்ரியாநநமிநாநகுஸ
ராயிஷ்டிதெ ஜெஹெடவிந்ரு ஸுஷுவிந்ரூநா வரிஹதெ
தீநாம ஏஸாஸாவ்ரிதஃ। கூஜ்ருகெ ஹநூமதுதெந
ஸுராணா ப்ரவ்ருாவிதாயஃ வாஜாந்ரு ஜ்ஞாராஜ
விரெஹ ராஜ தநயாந்ரூாயெந யாயுவ்ருெதெ।
—ஸுந்தர காண்டெ ஸர்கெயொஃதயஃ.

ஒப்பிடுவதுண்டு; அதிகாலையில் மனம் மிகத் தெளிவுற்றிருப்பதும் இயல்பு; ஸம்ஸார ஸங்கடங்களில் உழன்று அதினின்றும் ஈண்டு கடைத்தேற ஆவல் கொண்ட பகவத் பக்தன் ஆர்த்தி மேலிட்டு அதிகாலையில் தன் ஸத்வகுண மிகுந்த மனதை பகவானிடம் செலுத்தி தியானநிஷ்டையில் இருக்க முயல்வது வழக்கம். இரண்டாம் பத்தியத்திலுள்ள 'ராகாசந்த்ரத்யுதிஸஹசரம் ராஜஹம்ஸம்' என்பது ஸத்வ குணம் நிரம்பிய பரிசுத்த மனதையும், 'க்ரீடா சேலம் சமல ஸரஸி' என்பது அம்மனம் இருதய கமலத்தில் பகவத்தியானத்தில் குதூஹலமாய் ஈடுபடுவதையும், 'கால்யே' என்பது பிராஹ்ம முகூர்த்தம் என்னும் காலை நேரத்தையும், 'கபிகுலங்கள்' என்பது சபலமான இந்த்ரியங்களையும், 'தூயமாநாந்தராத்மா' என்பது புருஷனுக்கு அக்காலையுண்டான ஆர்த்தி விசேஷத்தையும், 'தூண்ணம் உத்யோஜயிஷ்யந்' என்பது பகவத் பாதாரவிந்தங்களில் பக்தி செய்து தரிதமாக—இப்பொழுது எடுத்துள்ள பௌதிகதேஹத்தை விடுத்தவுடனே— அவரை அடைய ஆசாரியன் மூலமாக நிகழ்த்தப்படும் முயற்சியையும், 'தந்மயாத்மா' என்பது பக்திப் பிரபத்திகளின் பலனை முடிவில் அடையப்போகும் பகவத்ஸாயுஜ்யத்தையும் உட்கருத்தாகப் பெற்றுள்ளன.[1]

---

1. மனதை ஹம்ஸமாகக் கருதுவது அறிஞரின் கொள்கை. இராஜ ஹம்ஸத்தை இராமன் தூது அனுப்ப முயன்றதாகக் கவிதார்கிக வஸிஷ்டம் காவ்ய மியற்றியிருப்பதைக் கண்டு, கேரள தேசத்துச் சிவபக்தரான கவி யொருவர் 'ஹம்ஸஸந்தேசம்' என்னும் இதே பெயரை வைத்து, சிவ பக்தி மேலிட்டு ஸந்தேசகாவ்யம் ஒன்று இயற்றியிருக்கிறார். இக்காவ்யத்தில் ஹம்ஸம் என்பதை மனது என்று அவர் வழங்குகிறார். அவர் சில காலம் சிவபக்தி செய்வதை மறந்துவிட்டார். அப்படித் தான் இழந்த சிவபக்தி யென்னும் தேவியினிடம் தன் மனதை (அதையே ஹம்ஸமாகப் பாவித்து) தூது அனுப்புகிறார். (திருவனந்தபுரம் ஸம்ஸ்க்ருதக் கிரந்தாவளியில் 1930-ல் வெளியாயுள்ளது இந்நூல்.)

பூர்ண ஸரஸ்வதி என்பவர் மேகஸந்தேசத்திற்கு வித்யுல்லதா என்கிற இரஸமான வியாக்யானம் இயற்றியும், ஹம்ஸஸந்தேசம்

ஆதி கவியான வால்மீகியின் ஸ்ரீராமாயணத்திலிருந்து ஸந்தேசகாவ்யத்திற்கு ஏற்றவையான அநேகம் அரிய அம்சங்களைக் காவ்யவிஷயத்திற்கு ஆதாரமாகத் திரட்டி யெடுத்தும், ஆதியில் ஸந்தேச ரூபமாகக் காவ்யமியற்றிய காளிதாஸனுடைய மேக ஸந்தேசத்தை மாதிரிக்காகப் பின்பற்றியும் ஆதிகவி - மஹாகவி களான அவ்விருவரிடமும் தமக்குள்ள ஆதராதிசயத்தையும் கௌரவத்தையும் வேதாந்ததேசிகன் இச்சிறு ஸந்தேசகாவ்ய மியற்றி வெளிப்படுத்தியதோடு, இவ்வித ச்ருங்கார காவ்யத்தை இஹ-பாரஸுகமாகச் செய்து, அகில ரஸிகர்களும் அதை ஆதரிக்குமாறு சீர்திருத்திய முறையையும் விளக்க மார்க்கதர்சி யானார்.

மேகஸந்தேசத்தைச் சுமார் முப்பது வருஷங்களுக்கு முன் நான் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டது முதல், அதிலும் பன்மடங்கு சுவை பொருந்திய நிகமாந்தகுருவின் ஹம்ஸஸந் தேசத்தையும் அவ்வாறே மொழிபெயர்த்து வெளியிடவேண்டு மென்கிற அவா எனக்கு இருந்து வந்தது. சென்னை தாம்ஸன் கம்பெனி அச்சுக்கூடச் சொந்தக்காரர்களில் ஒருவரும் தாராள குணம் பொருந்தியவருமான ஸ்ரீமான் எஸ். எஸ். ஸ்ரீநிவாஸ ராகவன் அவர்களுடைய ஆகஸ்மிகமான ஆதரவு கிடைக்கவே ஹம்ஸஸந்தேச மூலமும், அதன் இம்மொழி பெயர்ப்பும் உரை முதலியவற்றுடன் இவ்வாறு அச்சிட்டு வெளியிட அனுகூலம் ஏற்பட்டது.

"ஆர்ய கிருஹம்"
வேப்பேரி–சென்னை,
விஜய வரு
12—8—1941.

வைத்திய ரத்னம்
மே. துரைஸ்வாமி ஐயங்கார்.

என்கிற பிரத்யேகமான காவ்யமொன்று இயற்றியும், காளிதாஸன் கவிதார்க்கிக விஹ்ருமம் ஆகிய இருவரையும் கௌரவித்து, அவ் விரு நூல்களே ஸந்தேச காவ்யங்களுள் மேன்மையுற்றவை என் பதையும் ஸாஹித்யவல்லோருக்கு அறிவித்திருப்பதாகக் கருது கிறேன்.

ஸ்ரீ:

ஹம்ஸ ஸந்தேசம்

முதல் ஆச்வாஸம்

மானிடத்தன்மையை மேலாக மதித்து மேன்மை பொருந்திய சூர்யவம்சத்தில் (இராமசந்திரனுய்) அவதரித்த திருமால்[1] ஜானகியைத் தேடுவதில் ஆவலுள்ளவராயிருக்க, ஆஞ்ஜநேயரும் அக்காலே திரும்பி வந்துவிடவே,[2] இனிச் செய்ய வேண்டியதைத் தீர்மானித்துக் கொண்டு, (ஸீதையினிடம்) காதலதிகரித்தவராய், கல்ப காலம் போல் தோன்றிய ஓர் இரவைப்[3] பொழுது விடியுமளவும் ஒருவாறு பொறுத்திருந்து கழித்தார். 1

---

1. ஹவாநு நாராயணோ தேவः ஸ்ரீராம ஸுகராயேயா ஹரிः—"நீர் சக்ராயுதனும் ஸ்ரீயःபதியுமான ஸாக்ஷாத் தேவதேவன் நாராயணனே" என்று ஸ்ரீராமாயணம். (யுத். 120–13).

2. ஆஞ்ஜநேயர் இலங்கையிலிருந்து திரும்பி வந்ததும் அன்னப்பறவையைத் தூது அனுப்பும் விஷயமான 'ஹம்ஸ ஸந்தேசம்' என்னும் இக்கட்டுரை ஆரம்பமாகிறது.

3. ஜாதிவகு விஹீ நவ ராஜவு தீ ரவஸ்ய தः। ரவி நு தீவ-ர ஹவிஷ்யந்தி ராத்ரியா ரவ ஜாஸ்ய தः॥— 'பந்து மித்ரர்களைத் துறந்து, ஜானகியையும் காணுது பரிதவிக்கும் எனக்கு நித்திரையின்றியே நிசிகள் நீண்டு வளரும்" என்று ஸ்ரீராமாயணம். (ஆரண். 64–14).

அவர் வானிற் கதிரவன் உதிக்கு முன்பே வானர ராஜனை ஸுக்ரீவனது ஸைனையப் போருக்குப் பிரயாணம் செய்விக்கக் கருதி யிருந்தும், ஜானகி நெடுந் தூரத்திற் பிரிந்திருத்தலால் கடுந்துயரத்தில் அவர் மனம் ஆழ்ந்திருந்தது; அச்சமயம் அக்காலவியல்பால் வந்து[1] அங்குள்ள தாமரைக் குளத்தில் தாவியோடி விளையாடிக் கொண்டிருந்ததும், பூர்ணிமா சந்திரனைப்போல் பூரிக்கும் ஒளியுடன் விளங்கியதுமான இராஜ ஹம்ஸம்[2] ஒன்றைக் கண்டார். 2

அப்பறவையின் ஒய்யார நடை ஸீதையின் நடையை ஒத்திருக்கவே, அவளது வெண்பட்டாடையில் அப்பற

---

1. மாரி காலத்திற்கு அடுத்த சரத்ருது வென்னும் பருவத்தில் இத்தூது அனுப்பும் விஷயம் நேர்ந்ததாகக் கவியின் பாவனை. இந்தப் பருவத்தில்தான் படைத்திரளுடன் அரசர்கள் போருக்குப் பிரயாணம் புறப்படுவது வழக்கம். சரத் காலத்திலேயே அன்னப் பறவைகள் மானஸ ஸரோவரத்திலிருந்து இந்நாட்டிற்குத் திரும்பி வந்து மாரிகாலத்து மழையினல் நிரம்பிய ஏரி குளம் முதலிய வற்றில் வஸித்து வரத் தொடங்குமென்று கவிகள் வர்ணிப்பதும் முறை. பிரிவாற்றுமையால் இராமன் மனநோயுற்றிருந்த அச் சமயத்தில் செய்தி சொல்லி ஆறுதலடைய தற்செயலாய் அப் பறவையரசு அங்கு வந்து தோன்றிற்று என்பதையும் 'காலோப யாதம்' என்னும் சொல் குறிப்பிடுகிறது.

2. அலகும் கால்களும் சிவந்து, உடல் மிகவும் வெண்மையா யுள்ள அன்னப்பறவை அஜ்ஜாதியில் சிறந்ததென்றும், ஆகவே அது இராஜஹம்ஸம் எனப்படுகிறது என்றும் கூறுவர். 'ராஜஹம்ஸாः ஸஹாயாः' என்று மேகஸந்தேசத்தில் (1-11) காணும் குறிப்பை மனதிற்கொண்டு, ஸீதைக்குத் தூதனுப்பும் விஷயத்தில் இராமன் இராஜஹம்ஸத்தையே ஸஹாயமாகக் கோரினதாக ஸ்ரீதேசிகன் கருதினர் போலும்.

வையின் உருவம் சித்திரிக்கப்பெற்றுமிருக்கவே, அதன் ஆர்ப்பரிப்பும் அவளது சிலம்போசைக்கு ஏற்றதாகத் தோற்றமே அவரது பார்வை அதனிடமே அசையாது பற்றியது; அவர் ஆண்மையிற் சிறப்புற்றிருந்தும் அச் சமயம் அவளிடமே அவரது மன்ம லயித்துப்போக, அவர் சிறிது நேரம் மனங்கலங்கி மயக்கமுற்றார்; இதை நோக்குங்கால் காலம் வாய்க்கையில் காமதேவனது கட்டளை கடுமையாய் இயங்குவது இயல்பெனக் கருதுகிறோம். 3

இலக்ஷ்மணனது மூத்த ஸஹோதரனை ஸ்ரீராமன்[1] அப்பொழுது மெதுவாகத் தேறுதலடைந்து, அன்பின் பெருக்கினல் அருமை விஷயமாகத் தோற்றிய செய்தியைக் கொண்டு மைதிலியின் மன்னுயிரைக் காக்க விரும்பி, அப்பறவை யரசை பங்கயமலர்களின் இதழ்களால் இனிது உபசரித்துப் பூஜிக்கலானர்;[2] ஆம், காமிகளுக்குத் தூதன்

---

1. தஜியா நஹி ஸௌவதி வத தம வஜஹுஸு நாஃ— "வீரனன ஸஹோதரரே, ஸுகதுக்கங்களைச் சமமாகப் பாவிக்கும் உம்மைப்போன்றவர் இவ்வாறு உள்ளம் பதறி துயருறுவது உசிதமன்று" என்று இலக்ஷ்மணன் இராமனுக்குத் தேறுதல் கூறித் திடப்படுத்துகிறார். (இராமா. யுத். 66-15). அவ்வாறு இராமன் மனம் தேறி ஆறுதலடைய இலக்ஷ்மணன் உதவியாயிருந்த விஷயத்தைக் குறிப்பிடவே இங்கு ஸுஷேணவசநாத்ஸுஜநஸ்ய- 'இலக்ஷ்மணனது மூத்த ஸஹோதரன்' என்கிற அடைமொழி கூறப்பட்டதாய் அறிக.

2. ஸவ்ருதஸ்மேர: கூடஜகாஷ்ட: கவி தாவத்யா தவிஷ்ய— "குடமல்லிகை மலர்கள் கொண்டு அம்மேகத்திற்கு அர்க்யமளித்துபசரித்து"—என்கிற மேகஸந்தேச (1-4.) வர்ணனை இங்கு குறிப்பிடத் தகுந்தது.

கிடைபபது காதலியை ஆலிங்கனம் செய்வதினும் அதிக இன்பமளிப்பதாம்.[1] 4

கடுமையாக மனக்கலக்கமடைந்த இராமன், தான் கூறும் செய்திக்குறிப்பை அறியவியலாத அப்பறவையினிடம் அனுமானிடம் இருப்பதினும் அதிக கௌரவங் காட்டி அன்புடன் அதை வேண்டத் தொடங்கினர். பிரிவாற்றுமையினல் பெரிதும் மனங்குழம்பியவர் மேகம் மலை மரம் முதலியவற்றினிடமும் வருந்தி வேண்டினமையை விளக்கிக் கொள்ள முயல்வதுண்டு;[2] அவ்வாறிருக்க இன்ப துன்பங்களுணரு மியல்புள்ள பிராணியினிடம் விஷயமுரைத்திடக் கேட்கவும் வேண்டுமோ? 5

அன்னமே, உன்னை அரு மறைகளாகும் திரைகடலைப் பருத்திடும் வல்லமை வாய்ந்த விச்வரூபியான விஷ்ணுவின் வம்சத்திற் பிறந்தவனென்றும்,[3] கமலாஸனரான நான்

---

1. காதெரஹஸ: ஸுஹ்ருஜ்ஜன: ஸஜீவாஸு திஸநிஹ்னுத: "நட்பு மிகுந்த நாயகனிடமிருந்து நண்பனொருவன் வந்தால், அஃது அம்மாதரால் கணவன் சேர்க்கையினும் சிறிதே களிப்பூட்டுவதிற் குறைந்ததெனக் கருதப்படுமாம்"—மேக. 2-33.

2. காமார்தா ஹி ப்ரக்ருதிக்ருபணா ஶ்சேதநா சேதநேஷு—"மன்மததாபத்திலுல் மனநோயுற்றவர் அறிவுடையோரிடத்தும் அசேதநங்களிடத்தும் தமதெளிமையை முறையிடுவது இயல்பு."—மேக. 1-5.

3. முன்பு ஸமஷ்டிரூபமாயிருந்த உலகத்தில் பிரம்மதேவன் தோன்றியதும் அவர் ஒன்றுமறியாதவராகப் பிறந்திருக்க, பரமாத்மாவான நாராயணன் ஹம்ஸரூபமாய் வந்து, அகண்டமாயிருந்த கடல்போன்ற வேதத்தை வெவ்வேறுகப் பிரித்து, விஷய தத்துவங்களை அவருக்கு உபதேசித்து, உலகப் படைப்புக்கான உபாயங்களை உணர்த்தியதாகப் புராண வரலாறு.

முகனுக்கு அவருகந்த சிறந்த வாஹனமென்றும் முனிவர் மொழிந்திடுவர். அன்றியும் நடக்கையிற் சிறப்புற்ற[1] நீ அந்நான்முகன் நாயகியான நாமகளிடமிருந்து, அவளுக் கேற்ற அழகிய நிறத்தையும், செவியாகும் சுவைபுணரும் நாவினுல் அருந்தத்தகும் அமுதமெனக்கூடிய இனிய தொனியையும் நீ அடைந்திருக்கின்றனை.[2] 6

நண்ப, இம்மண்ணுலகில் ஸாமான்ய மனிதருக்கிடையில் நாமும் ஒருவராவோம்; நீயோ இம்மா பெரும் வையகத்தில் ஆகாயஸஞ்சாரிகளுக்குத் தலைவனெனத் தகும் உயர்வை உண்மையிற் பெற்று விளங்குகின்றாய்; ஆகிலும் உன்னிடம் உதவியை நாடி வந்தவரைக் காப்பதன் பொருட்டு இத்தூது புரியும் காரியமும் உனக்கு உசிதமே; ஏனெனில் பிரபஞ்சம் அனைத்தையும் படைக்கும் பிரமம்

ஹம்ஸாவதாரம் செய்த அப்பகவானுடைய பரம்பரையில் உதித்தவன் நீ என்று ஹம்ஸத்தைக் கண்டு புகழ்கிறார் இராமன்.

1. நடக்கையிற் சிறப்புற்ற - அழகிய நடைக்குப் பெயர் பெற்றது அன்னம் எனப் பொருள். நல்லொழுக்கத்திலும் சிறப்படைத்தது என்கிற மற்றொரு பொருளும் உண்டு.

2. ஜாதம் வம்சே ஸுகநவிதி வாஸுதாவ-க் காநம் என்கிற ச்லோகத்தை (மேக. 1-6) அனுஸரித்தது இது.

3. வைராமாநாம் பதிவஸதி என்பது மூல வாக்கியம். வ்யோமகம் என்றால் ஆகாயத்திற் சஞ்சரிப்பது என்று பொதுவான பொருள். அதற்குப் பக்ஷிகளுக்கு அரசனை இராஜஹம்ஸம் என்று ஸாதாரணமான அர்த்தம். ஆகாய ஸஞ்சாரிகளான வானவருக்குத் தலைவன் என்றும் மற்றொரு பொருள். இராஜஹம்ஸத்தின் பெருமையைத் தேவர்களின் அரசனுடையதற்கு ஒப்பாக ஏற்றமாகக் கூறக் கருதி இவ்விதம் சிலேஷையாக வர்ணிக்கப்பட்டது.

தேவனும் முன்னொருகால் ஸாரதியா யிருந்து ஸேவை செய்திருக்கிறார்[1] அன்றோ? 7

இக்ஷ்வாகு குலத்தினர் நினைத்தமாத்திரத்திலே உலகத்தையே உருமாற்றியமைக்கும் திறமை பொருந்தியுள்ளார்;[2] இயற்கையிலேயே மென்மையிற் சிறந்தவர்; அவ்வம்சத்தினர்க்கும் இவ்வாறு இன்னல் தரும் காலம் நேர்ந்திருப்பதைக் கண்டு, கடல்நீர் மோதுவதால் கண்ணுக்குத் தோன்றியும் தோன்றுமலுமுள்ள த்ரிகூடமலையின் மீது அமைந்துள்ள அரக்கர் தலைநகரமாம் இலங்கைக்கு நீ செல்வது சான்றும். 8

அன்பார்ந்த அன்னமே, தென் திசையோ அநேக திவ்யஸ்தலங்களடர்ந்து சிறந்த குணங்களமையப்பெற்றது; சந்தனமரங்களின் வளப்பமான வனங்களால் வனப்பு

---

1. சிவன் த்ரிபுராஸுர விஜயம் செய்தபோது அவருக்குப் பிரம்மதேவன் ஸாரத்யம் செய்ததாகப் புராண வரலாறு. "உலகங்களைப் படைக்கும் அம்மஹான் நான்முகன் மஹாத்மாவான பரமேச்வரனுக்குத் தேவர்களால் ஸாரதியாக அமர்த்தப்பட்டார்; தன் தேஜோரூபத்துடன் விளங்கிய அப்பகவான் பிரம்மதேவன் தேரில் ஏறி, குதிரைகளின் கடிவாளங்களைப் பிடித்துக்கொண்டு ஸாரத்யம் செய்தார்"—ததः ஸ ஸுமவாநு தெவொ ப்ரஜாபதிः। ஸாரதியே கல்பிதோ தெவைர்மஹாநஸௌ। உஹாத நः। ரூபவாநு ஸுமவாநு தெவொ தீவ்யுதாநः ஸுதேஜஸா। சுஹோபநு ஹி வ்யதோ தாஉம் ஏ ஸம்ஜுஹ்ராஹ வ்யதோ தாஉஹः॥ மஹாபார. கர்ண. அ. 27.

2. ஸதெவ ஹ்யுவாச நாஷ்ட்ரெ நாஸ்ட்ரெ ஜுஹு ஸதெவ ஸுஸ்ரு வாரிவ தாயோதி—"தேவர், கந்தர்வர், மனிதர், நாகர்கள் இவர்களுடனும், பர்வதாதிகளுடனுங்கூடிய உலகமனைத்தையுமே கீழ்மேலாகப் புரட்டியமைத்திடுவேன்" என்கிற இராமாயண வசனத்தைக் குறிப்பது இவ்விஷயம்.

மேலிட்டது; உயர்ந்த நல் முத்துக்களை உற்பத்தி செய்யும் இடங்களைப் பெற்றது; அது தென்னற் காற்று கிளம்பி வீசுவதற்குத் தாய்நாடுமாகும்; ஆனல் அரக்கர் இருக்கும் இடமென்னும் ஒரு சிறு தீதை மாத்திரம் பொருட்படுத் தாது, பொறுத்துக்கொண்டு அத்திசைநோக்கி எமது அன்பையும் ஜானகி ஜீவித்திருத்தலையும் கருதி நீ போய் வரவேண்டும். 9

சிறப்பு வாய்ந்த கலைவல்லோன் தொலைதூரம் சென்ற பின் விவேகமற்ற வீண்பேச்சுக்காரர்கள் விரைந்து கிளம்பு வதுபோல், நீ கைலமலைக்குச் சென்ற பின் [1]சருக்குடன் கொழுத்துப்போன கானகத்து மயில்கள், கார்காலம் கழிந் திடவே, இப்பொழுது தம் தோகைகளை யிழந்து தொனி யடங்கி மௌனமா யிருப்பதைக் கண்டு [2] மார்க்கத்தில் உனக்கு மனக்களிப்பு மேலிடும். [3] 10

---

1. மாரிகாலத்தில் அன்னப்பறவைகள் கைலைக்கு அருகி லுள்ள மானஸப் பொய்கைக்கு இந்நாட்டிலிருந்து போய்விடு தாகக் கவிகள் கூறுவது வழக்கம்.

2. "மஹாரண்யங்களிலுள்ள மயில்கள், மேகங்கள் எல்லாம் வானத்தில் மறைந்ததைக் கண்டு தம் தோகைகளாகும் அணி களிழந்து, பொலிவிழந்து, பெண்பறவைகளிடம் ஆவ லொழிந்து, மனத்தென்பழிந்து, சோர்ந்து ஒடுங்கிக் கிடக்கும்"- நஹ: வலீகூ்யாஷ்டூயமிலைவி-ஶுஷ்கம் விஶீகுஷ்வைஷ்ர-ர ஹரணா வநிநஷ்டூ, வ்ரியாவ்லுலுக்தா விநிவ்ருத்தே ஶாலா மநிதாஸ்ஸீ வா யஸ்ாந வரா யேஶிரா: என்று ஆதி சவி இவ்விதமே வர்ணிக்கிறார்.

3. உந்வ்ரவாஶ: வ்ரயேம வ்ரஜ்ரா நவிஜி காரணம்—' பிரயாணத்திற்கு ஆரம்பிக்கையில் முதலில் மனக்களிப்பு ஏற்படுவதுதான் கார்யஸித்திக்குக் காரணமாம்' என்று சகுன சாஸ்திரம்.

அருங்குணமமைந்த அன்னமே, பத்மினிகள் என்னும் அழகிய செந்தாமரைக்குளங்களில் புதிய மதுவை மெதுவாகப் பருகிக்கொண்டும், காலத்தில் மலர்ந்த கருநெய்தலோடைகளில் ஒய்யாரமாய் வீசி யுலாவிக்கொண்டும், காட்டானைகளின் மதநீர்களை யேந்திக்கொண்டும் வீசும் மந்தமாருதமானது மேன்மேலும் நறுமணங்களை அள்ளித் தூவி உன்றனை உபசரிக்கப்போகின்றது.[1] 11

உன்னுடன் கூடவே இப்பொழுது[2] ஒங்கிச் செழிப்பவையும், ஆகவே உனக்கும் பந்துவெனக் கூடியவையுமான பந்துஜீவங்கள் என்னும் மலர்கள்[3] அவற்றின் பெயருக்கேற்றவாறு மாருதத்தினால் அசைக்கப்படுகையில்

---

1. "ஹனுமான் ஆகாயமார்க்கமாய் இலங்கைக்குப் போகும் போது மந்தமாருதம் இராமகாரியம் வித்திபெற வேண்டியதற்காக அவர்மீது மெதுவாக வீசி யுபசரித்தது"—விவெவெ வு தஹ வாயூ ராகார)ாய-ஃ வீஹயை—என்று இராமாயணத்தில் கூறப்படுகிறது. ஸு. 1-88. [சிருங்கார வேஷம் பூண்ட காமுகன் ஒருவன் இனிது மதுபானம் செய்து கொண்டு, மிகவும் காதல் கொண்ட பத்மினீ ஜாதி ஸ்த்ரீகளிடம் சுகானுபவம் பண்ணிக்கொண்டு, அவர்களது கருநெய்தல் மலர்போன்ற விசாலமான கறுத்து அழகிய கண்பார்வைகளுக்கு ஈடுபட்டு மோஹங் கொண்டு, அவர்களுடன் க்ரீடித்தவாறு உல்லாஸமாய் உலாவுவது இந்த வாயுவின் உல்லாஸ அசைவுக்கு ஒப்பாயிருப்பதாக ஒரு த்வனி என்னும் உட்கருத்து இந்த ச்லோகத்தில் உண்டு.]

2. இப்பொழுது என்பது சரத் காலத்தைக் குறிக்கிறது.

3. சரத் ருதுவில் அன்னப்பறவைகள் பலம் பெற்றுக் களிப்புறுகின்றன; அது போலவே பந்துஜீவ மலர்களும் அக்காலத்தில் செழிப்பது இயல்பு; அன்னங்களும் அந்த மலர்களும் ஏககாலத்தில் செழிப்பதால் அப்புஷ்பங்களை அவற்றின் பெயருக்கேற்ற வாறு அன்னங்களுக்குப் பந்துவாகக் கவி வர்ணிக்கிறார்.

அவற்றிலிருந்து உதிரும் மலர்ப்பொடிகளால் உனக்குப் போதுமாறு நறுமணப்பூச்சை நன்கு இடப்போகின்றன;[1] அதனல் பார்வதியின் பாதத்துச் செம்பஞ்சுக் குழம்பாலும் ஆகாயகங்கையின் நுரைத்திரளாலும் ஒருங்கே பூசப் பெற்று பூர்ணமாகத் தோன்றும் சிவபெருமானது சிரத்திலுள்ள சந்திரனுக்கு[2] அப்பொழுது நீ ஒப்பிடப் படுவாய்.[3] 12

ராஜஹம்ஸமே, நீ ஆகாயத்தில் எதுங்கால் ஆதித்தனது மெல்லிய கிரணங்களாகும் கம்பிகளை உட்புறத்தில் அமைபப்பெற்றதும், மாரிகாலத்திற்குப்பின் மிகுந்துள்ள இந்திரதனுஸ்ஸின் சில பகுதிகளாகும் வர்ணச்சீலையினல் ஓரங்களிற் பல நிறமாகச் சித்திரிக்கப் பெற்றதுமான சரத்காலத்து வெண்முகில்களே, உன் பிரயாணத்திற்கு அனுகூலமா யிருக்குமாறு அசைந்து வரும் வாயுவினல் உனக்

---

1. பந்துஜீவமலர்ப் பொடியானது சந்தனப் பூச்சுபோல் ஹம்ஸத்திறகு அமையப்போகிறது என்று கருத்து. வடிஜ ய யாஹ்ரு ஹஸ்யாஸ்ய வாந்வாஹ ஹ்ரு ஹரோ மதாஹ— "வீட்டிற்கு வந்த உறவினரை கிருஹஸ்தர்கள் உபசரித்துப் பூஜிப்பது முறை" என்று தர்மசாஸ்திரம். அதுபோல் பந்துஜீவங்கள் அகிகாலத்தில் வரும் அன்னப்பறவையாகும் உறவினனை உபசரிக்குமெனக் கருத்து.

2. சிவனது சிரஸிலுள்ள சிறு சந்திரகலே பார்வதியின் பாதத்துச் செம்பஞ்சுக் குழம்பும், கங்கையின் நுரையும் பட்டு முழுச்சந்திரனைப்போல் விளங்குமாறு செண்ணிறத்துடன் பொதாய் மாறுவதாக வர்ணனை.

3. பந்துஜீவமலர்ப்பொடிகளால் ஒருவாறு மஞ்சள்நிற மடைந்த ஹம்ஸம் செம்பஞ்சுக் குழம்பு முதலியதால் பூசப்பட்டு பூர்ணமாகக் காணப்படும் சந்திரன்போல் விளங்குமென்று பாவனை

குப்பிண்ணுல் தாங்கி வரப்படும் வெண்குடையாய்ப் போ
கின்றன.[1] 13

அன்பார்ந்த நண்ப,[2] நீ இவ்விதம் பாதைகளை இனிது கடந்துபோன பின், ஜனக மஹாராஜனது கழனி யைக் கலப்பையால் உழுகையில் அங்கிருந்து உதித்த உத் தமியான உன் தோழி ஸீதையைக் காண்பாய்; அவள் என் பொருட்டே இன்னமும் தன் மெலிந்துள்ள மேனியைத் தன்புற்றவாறு தாங்கிக்கொண்டு,[3] இப்பாருலகிற் பிற

---

1. வெண்முகில் - மாரிகாலத்துக்குப் பின் நீர் நீங்கி வெளுத்திருக்கும் மேகம். இங்கு வெண்முகில் வெண்குடையாக வும், சரத்காலத்தில் தெரிந்தும் தெரியாமலுமுள்ள இந்திர தனுஸ்ஸு அக்குடையின் ஓரத்தில் சுற்றிலும் அமைக்கப்பெற்ற பல நிறமான கறையாகவும், மெல்லிய சூர்யகிரணங்கள் குடை யின் உட்புறத்துக் கம்பிகளாகவும் பாவிக்கப்படுன்றன; அவ்விதம் அசைந்துபோகும் வெண்முகிலாகும் வெண் குடையை இராஜ ஹம்ஸ மென்னும் அரசன் செல்லும்போது வாயுவாகும் ஸேவகன் அதற்குப் பிடித்துச் செல்வதாகவும் வர்ணிக்கப்படுகிறது.

2. கூஹுயம் தித,ஹாவெந லதாம ஹாராவயொக நம்—"பதிவ்ரதையை மித்திரன் கபடற்ற மனத்துடன் போய் காண்பது தவறன்று" என்கிற தர்மத்தைக் குறிக்கவேவியலவே (அன்பார்ந்த நண்ப) என்று குறிக்கப்பட்டது.

3. லா வ,கூலெதுவ தங்ஜீ கூவியொமாஹு கமி-ஹ தா—"இயற்கையிலேயே மெல்லிய மேனியாளான ஸீதை, உமது பிரிவாற்றுமையால் இன்னும் மெலிந்துவிட்டாள்." இராமாயணம். கூலஹ்ரா நி ம ஹ:வோ நி வாவஸு ஹ்ரதயு ஹமி ஹ:। ராகூவீ நாம லோவொராணாம தூகூலெதவ்ய-ம் யாதி ஹ்ருதி ॥ "தாங்கவியலாத துன்பங்களையும் கோரராகூவி கள் கூறும் இருதயத்தைப் பிளக்கும் கடுஞ்சொற்களையும் உமக் காகப் பொறுத்துவருகின்றேன்." இராமாயணம்.

புருடனைப் பாராத உத்தம பத்தினி யென்னும் பெரும் புகழ் பெற்று விளங்குகிறாள். 14

இத்தாமரையோடையாகும் காதலி உன்னைப் பிரிந்திருந்த காலத்திற் பெரிதும் குன்றியிருந்து மீண்டும் இப்பொழுது மிகக் களிப்புற்றிருக்கின்றது ; எனினும் நீ மீண்டும் கடுகத் திரும்பி வருவதாய் இனிய மொழி கூறி மெதுவாக அதை நயமுறக் கேட்டுக் கொள்வாயாக ; அப் பொய்கையும் வீணையின் இன்னிசைபோல் எழும் அக்குளத்து வண்டுகளின் ரீங்காரமொழிகொண்டு, ஜானகியினிடமுள்ள அன்பினால் 'அங்ஙனமே செய்க' என உனக்கு இவ்விஷயத்தில் அனுமதியளிக்குமெனக் கருதுகிறேன்.[1] 15

நீ இத்தாமரைத் தடாகத்திலிருந்து கிளம்பி தென் திசை நோக்கிப் பறந்து செல்வாயாக : அக்காலை குன்றத்தின் கொடி வீடுகளிற் காதலர்களுடன்கூட இன்புற்று வீற்றிருக்கும் மறவர் மடந்தைகள் உயரப் பார்க்கும் போது 'அகாலத்தில் சந்திரனுதித்ததேதா !' என மயங்கி நொடிநேரம் அவர்களுக்குச் சந்திரோதயச் சீர்மையை (உனது வெண்ணிற உருவத்தால்) உண்டு பண்ணியவண்ணம், வலிய சிறகுள்ள பெரும் பறவைகளைத் தூரத்திலிருந்தே உற்று நோக்கியவாறு அவற்றிற்குப் போதிய பாதையைத் தந்துவிட்டு[2] நீ பறந்தேகக் கடவாய். 16

---

1. கூவாஹவ வியவஸவஜ்ஜம் என்னும் மேகஸந்தேசத்தின் (1–11) ச்லோகத்தை அனுஸரித்தது இவ்விஷயம்.

2. கதிவஹஃ வாவஸாஜீகீ-"அன்பு அதிகமானால் தம் ஆப்தருக்கு என்ன தீங்கு நேரிடுமோ என்று அஞ்சுவது உலகத்தில் இயல்பு." என்கிற முறைப்படி ஹம்ஸத்திற்கு வேறு பிராணிகளிடமிருந்து தீங்கு நேரிடாமலிருக்க வேண்டுமே என்பது தூது அனுப்புபவரின் மனக்கவலை. "கமிஜ்ஃ ஸாஜ்ஜம் ஹராதி வவநஃ கிம்வ்வீதி தூ-ந்ஜீலிஃ" என்கிற ச்லோகத்தை (மேக. 1–14) அனுஸரித்தது இது.

சரீர காந்தியினல் சந்திர பிம்பத்தின் சீர்மையையும் நீ மீறி யிருக்கின்றனை ; அத்தகைய தேஹத்துடன் நீ உல்லாஸமாக உயரக் கிளம்பும்போது, அமுதம்போல் இனிது துலங்கும் உனதுடலின் பிரதிபிம்பத்தை மணி மயமான **மால்யவான்** என்னும் இம்மாமலே தனக்குள் தாங்கி நிற்க, அத்தேற்றம் ஆதிதேவனை திருமால் தன் மனத்திலிருந்து ஆதியில் சந்திரபிம்பத்தை புண்டாக்கை யில் தோன்றிய வெகு சோர்த்தியான அச்சீர்மையைப் பெற்று விளங்கும்.[1] 17

அன்பனே, ஹனுமானல் இலங்கைக்கு இரண்டு மார்க்கங்கள் விளங்க எனக்குக் கூறப்பட்டுள்ளன ; அவற் றுள் மேற்குப் பக்கமாயுள்ள அந்த (மலைப்பிராந்த) மார்க்கம் உனக்குப் போகச் சமீபமாக இருந்தபோதிலும், ஓயா மழையினல் அது சுகமாகக் கடந்தேதக்க கூடியதல்ல; கீழ்த்திசை வழிகளிலோ தேசந்தோறும் விநோதக்காட்சி கள் விசேஷமாயுண்டு; அத்திரளான காட்சிகளில் உன் கண்ணோட்டம் ஈடுபட்டு ஆழ்ந்து நிலைத்துவிடாதபடி எவ்வாறேனும் என்பொருட்டு அதைத் தடுத்துக்கொண்டு மேற்சென்வாயாக.[2] 18

கேட்பதற்கினிய உனது குரலோசையைச் செவி யுற்று, அங்கு அருகிலுள்ள அகத்திலிருந்து ஆவலுடன் உடனே வெளிவரும் நாகரிகமறியா நங்கையர் பகட்டான

---

1. வஜ்ரோ ஹநிவைராஜாதஃ— 'சந்திரன் பரமாத்மாவின் மனத்திலிருந்து உதித்தான்' என்று சுருதி.

2. இந்த சுலோக விஷயம் சாமர்த்தியவர்ணனை கையாதஃ' என்கிற (மேக. 1-13.) சுலோக விஷயத்திற்குப் பொருத்தமானது.

புருவ நெறிப்பின்றியே மிக நேர்த்தியாகத் தோன்றும் தம் கடைக்கண்களால் உனது உருவத்தை நோக்கி உன்றனை உள்ளபடி யறிந்துகொள்ள நேரிடும்; காடு, மேடு, மலை, நதிகளால் பிரிவுபட்டுள்ள அத்தகைய நாடு கனைக் கடுகவே கடந்துவிடவேண்டும்.[1] 19

கருப்பஞ்சோலைநிழலில் சென்தளிர்ப் படுக்கையில் இனிது அமர்ந்தவாறு உல்லாஸமாகச் சல்லாபம் செய்து கொண்டு மனங்களிக்கும் நெற்பயிர் காக்கும் மங்கையர், கர்ணாடக-ஆந்திரபாஷைகள் கலந்துள்ள[2] வெவ்வேறு வகைச் சங்கீதத்தில் மனம் ஆழ்ந்து மயங்கியிருக்க, அவர் களது மன்மத விலாஸங்களால் குழம்பிய கபடில்லா இனியா நிலைமையைக் கண்டு இன்புறுவாயாக. 20

அதற்கப்பால் அஞ்ஜநாத்ரி என்னும் சேஷகிரி, உன் கண்களைக் களிப்புறச் செய்தவாறு எதிரில் தோன்றப் போகின்றது;[3] விஷ்ணுவை வீற்றிருக்கப் பெற்றதாலும், தரணியைத் தாங்குவதாலும், மணிகளடங்கிய முடிகளைப் பெற்றிருப்பதாலும் இது ஸாக்ஷாத் ஆதிசேஷனே யென்று உலகத்தோரால் உறுதியாக ஊஹிக்கப்படுகின்

---

1. இது மத்திய இந்தியாவிலுள்ள சில பிரதேசங்களைக் குறிப்பது போலும். "த்வயாயத்தம் சாஷிவலுதிகி ஹ்ருதிவி ஹாவந்தி நதிஜ்ஜூ:" (மேக. 1-16). எனகிற பத்தியத்தை ஒத்தது இவ்விஷயம்.

2. கர்ணாடக தேசம் ஆந்திரதேசம் இவற்றின் எல்லைப்புறத் தைப்பற்றியது இவ்விஷயம்.

3. திருப்பதி மலையை அஞ்ஜநாத்ரி என்றும் சேஷகிரி என்றும் வழங்குவர்.

றது;[1] அதைச் சார்ந்துள்ள மெல்லிய வெண்ணிற மேகங்கள் அச்சேஷ னுடலிலிருந்து அப்பொழுதே கழன்ற பாம்புத்தோல் போலவும் பார்ப்பவர்க்குத் தோன்றும். 21

அம்மாமலையின்மீது மானிடர் ஏறிச் செல்கின்றனர்; விண்ணிலிருந்து வானவர் அங்கு இறங்கி வருகின்றனர்; அங்கு வந்து கூடியதும் தமக்குச் சாத்விக குணம் சாலவும் உதித்திடவே அவர்கள் தமக்குப் பரஸ்பரமிருந்த வற்றத் தாழ்வுமுதலிய வேற்றுமை யொழிந்தவராய், ஸகலருக்கும் ஸேவாபலன் ஸமானமெனக் கருதி, அவ்வனைவரும் ஒன்று சேர்ந்து திருமாலுக்குச் செய்யும் வந்தன வழிபாட்டை தீயும் இயன்றவளவு இவ்விடப்படி இனிது நிகழ்த்து வாயாக. 22

அவ்வஞ்ஜநாத்ரிக்குத் தென்புறமாகச் சிறிது தூரத்திலேயே ஸுவர்ணமுகரா என்னும்[2] நதியைக்

---

1. ஸுஜவஸ்துஜியா ஹெவ்ஷ வாகூஷாஹ்வேஷாத்ஸ்ஹ கோ மிஸிஃ— "சுத்த ஸத்வகுணமயமாயப் பெற்ற இம்மாமலை ஸாகூஷாத் ஆதிசேஷ ரூபியே" என்று அஞ்ஜநாத்ரி மாஹாத்மியம்.

2. வுவணஃதிவ லொகாநாம ஹாமயெபாஷியம நதீ நீதா ஸுவ உமஷ்வுந் ஊவஸீகூத ஜிஹ்வா। தவ்ஸாஹ்வாவஸ்வுதி விவ்வுராதீம வுவணஃஜுவஸீதி வா॥

"ஜனங்களுடைய பாக்கியத்தினால் ஸுவர்ணம் போன்ற இந்நதியை அகஸ்தியர் இப்பாருலகுக்குக் கொண்டு வந்தார்; இதன் பெருவெள்ளத்தின் பேரொலி திசைகளெங்கும் பரவியது; அதன் பெருமையைப்பற்றியும் திசைகள் தோறும் ஜனம்பேச்சு மிகப் பெருகிற்று; இக்காரணங்களால் ஸுவர்ணமுகரா என்று இந்நதி வழங்கப் படுகிறது" என்று ஸ்காந்த புராணம். இந்த நதி இக்காலத்தில் ஸுவர்ணமுகி எனப்படுகிறது. பொன்னிறு அல்லது பெண்ணை யாறு என்றும் ஸாமானியமாய் கூறப்படுகிறது.

கண்ணுறுவாய்; அஃது நீ இறங்கி அதனிடையில் வீற்றிருக்கவேண்டுமென விரும்புவதுபோல், ஒரு சிறிது தன்னில் மேற்கிளம்பிய மணற்குன்றுகளைப் பெற்றிருக்கும்; அன்றியும் இளம் பிறையைச் சிரத்திலேந்திய சிவபெருமான் ஸ்ரீநிவாஸனை அர்ச்சிக்கும் பொருட்டு, அதுதன் அலைகளாகும் கைகளால் அருகிலுள்ள அடவி மலர்களையேந்திவந்து உண்மையில் ஆதரவுடன் அவருக்கு அளிக்கவருவது போலத் தோற்றும்.[1] 23

நீர்வஞ்சிப்பூக்களின் நறுமணமடங்கிய அம்மணற்குன்றுகளிலிருந்தெழும் மந்தமாருதங்கள் உன்மீது மெதுவாக வீச, அப்பொழுது நன்கு விளங்காத வகையில் நீ இனிதாக ஆர்ப்பரித்துக்கொண்டு அவ்வாற்றில் மனங்களித்திருந்து விட்டு, அப்பால் அதிற் பற்றற்றவனைவே, அன்னியர் உன்னை ஆக்கிரமிக்காவண்ணமும், அதன் கரையிற் குடியிருக்கும் குறவர் சிறை பிடிக்காதவாறும் அங்கிருந்து கிளம்பி நின் பாதையிற் சென்றுவிடுவாயாக.[2] 24

அப்பால் மேன்மை பொருந்திய **துண்டீரமண்டலம்** என்னும் தேசத்தைக் கண்டுகொண்டே, அங்குள்ள **ஸத்ய விரதம்**[3] என்னும் தீவினைகளனைத்தையும் தீர்க்கவல்ல

---

1. சேஷகிரியில் ஸ்ரீநிவாஸனைச் சிவ பெருமான் (காளஹஸ்தியிலுள்ளவர்) ஆராதிப்பதாக வெங்கடாசல மாஹாத்மியம்.

2. **வ்ருக்ஷா தவ்ருக்ஷ வ நவ்ரவய ம**— என்கிற மேகஸந்தேச ச்லோகத்தை (1-19) இந்த ச்லோகமும் இதற்கு முன் ச்லோகமும் அனுஸரிக்கின்றன.

3. துண்டீரமண்டலம்—காஞ்சீமண்டலம். அந்த க்ஷேத்திரத்தை ஸத்யவ்ரத க்ஷேத்திரமென்று சாஞ்சீமாஹாத்மியம் அறிந்தவர் கூறுவர்.

கேரத்திரத்திற்குச் செல்வாயாக; அவ்விடத்திற் கலடைகள் கணவனிடம் கடுஞ்சினங்கொண்டு கரைபுரண்டோடும் பெருவெள்ளமா யுதிக்க, அக்காலை ஸம்ஸாரக் கடலைக் கடப்பதற்கு உலகத்தவரனைவருக்கும் முக்கிய மேஸதுவா யுள்ள அத்திருமாலே அங்கோர் திருவணையாகத் தோன்றிரைன்மே[1]! 25

அந்த கேரத்திரத்தில் அநேகவகை இரத்தினங்கள் நிரம்பி[2] அதிக குணம் பொருந்தியதும், எப்பொழுதும்

---

1. காஞ்சியில் வரதன் வீற்றிருக்கும் சிறு குன்று ஹஸ்தி கிரி எனப்படும். அக்குன்றத்தில் கிருதயுகத்தில் வரதராஜனுடைய ஆவிர்ப்பாவத்தைக் கோரி பிரம்மதேவன் யாசம் ஒன்று செய்தார். அப்பொழுது பிரம்மா தன் தர்மபத்னியான ஸரஸ்வதியைப் புறக் கணித்து, ஸாவித்ரியை அருகில் வைத்துக்கொண்டு அவ்வேள்வியை நடத்திஞர். அஃதறிந்த ஸரஸ்வதி நான்முகன்மீது கடுங் கோபமடைந்து ஸஹ்யமலையிலிருந்து நதீ ரூபமாகக் கிளம்பி வெகு வேகமாகக் கரைபுரண்டு வந்தாள். (அதனல் வேகவதி என்னும் பெயர் அந்நதிக்கு ஏற்பட்டது.) அவ்விதம் வந்த அமிதமான வெள்ளம் பிரம்மதேவனது யாகசாலை முதலியதை அழித்துப் போட முயலவே, அப்பொழுது ஸ்ரீமஹாவிஷ்ணு அந்நதி ஓடிவரும் வழியில் குறுக்கே அணையாகச் சயனித்துக் கொண்டார். (அவ் வாறு சயனித்த பெருமாள் தான் யதோக்தகாரி என்று அன்று முதல் வழங்கப்படுகிறார்.) ஆகவே அப்பக்கம் போகமுடியாமல் வெள்ளம் வேறு வழியாகத் திரும்பி யோடிவிட்டது என்று காஞ்சி மாஹாத்மியம்.

2. ஸஜவாஜிரயாவஷ்டஷ நியிரோயாஷ்டாஷஜாஃ ஸஹஸ்ரவாஹஸஹிஷ்ணுஷ்ட விரோநாநி யதஷ்டஷ்ஹ— "யானை, குதிரை, ரதங்கள், அஸ்திரங்கள், அம்புகள், புதையல், மாலைகள், வஸ்திரங்கள், விருக்ஷங்கள், சக்தி யென்னும் ஆயுதம், பாசமென்னும் ஆயுதம், மணிகள், குடைகள், விமானங்கள் என்னும் பதினேழ்குவித வஸ்துக்களில் மிகச் சிறந்தவை இரத்தினங்கள் ஆகும்" என்று மார்க்கண்டேயபுராணத்திற் கூறிய மிகவும் சிலாக்யமான பொருட்கள் நிரம்பியது அப்பட்டணம்.

ஸங்கீதத்தினி ஒலிக்கப்பெற்றதும், பூதவிக்குப் பொருந்தியதோர் காஞ்சி யென்னும் அரைநூண்மாலை யென்னத் தகுந்ததுமான காஞ்சிமாநகரத்தைக்[1] காணப் போகின்றனை; அத்திகிரியில் அமர்ந்திருக்கும் அப்பூரு ஷோத்தமன் அக்காஞ்சியையே காட்சியாகக் கண்டு கொண்டு த்வந்த்வங்கள்[2] நீங்கியவராய் ஸத்தியகாமரைக[3] ளீற்றிருப்பதையும் பார்க்கலாம்.[4] 26

ஆதியில் கிருதயுகத்தின் ஆரம்பத்தில் பிரம்மதேவனது இச்சைக்கிணங்க உற்பவித்தது அந்நகரம்; ஆகவே அருகிற் சென்றதும் பக்தியுடன் தலைகுனிந்து அதைப் பணிந்திடுவாயாக: அத்திகிரிநாதனை தேவராஜனுடைய

---

1. கூ ஐதிவை ஹூனை நாஷ தெந தத்ராஸ்தி தா ஹரிஃ। கூதஃ கூாஞ்சீதி விஷ்யாதா வாரீ பூணை விவயி-ஃ நீ—"க என்று பிரம்மாவுக்குப் பெயர். அவரால் அவ்விடத்தில் ஸ்ரீமஹாவிஷ்ணு, அஞ்சிதம் (பிரதிஷ்டை) செய்யப்பட்டதால் அந்த க்ஷேத்திரம் காஞ்சி எனப்படும்."

2. த்வந்த்வங்கள்—பசி, தாஹம், மூப்பு, மரிப்பு, புண்ணியம், பாபம் முதலிய மானிடருக்குரிய இரட்டைக் குணங்கள்.

3. ஸத்தியகாமன்—அளவிறந்த அழிவற்ற கல்யாணகுணங்கள் நிரம்பியவர். காஞ்சியில் கண் வைத்துப் பூதேவியினிடம் உண்மைக் காதலைப் பெற்றிருப்பவர் என்றும் பொருள்.

4. இந்த ச்லோகம் முழுவதும் பின்வரும் அகப்பொருளையும் குறிக்கும்:—பூதேவி யென்னும் பெண்மணிக்கு உயர் குணமமைந்த காஞ்சிமாநகரமே மணிகளிழைத்த காஞ்சியென்னும் அரைநூலணியும் ஆபரணமாகவும், அந்நகரத்து வாத்தியகோஷமே காஞ்சியின் சதங்கையொலியாய் அமைந்திருப்பதாகவும், பகவானுகிய புருஷ சிரேஷ்டன் அப்பெண்மணியின் காஞ்சீபூஷணத்தில் கண் வைத்து ஈடுபட்டிருப்பதாகவும் பொருள் விளங்குகிறது. "தேஷாம் ஜிகூஷா வயஜித விஜிஷா" (மேக. 1-24) என்னும் ச்லோகத்தை அனுஸரித்தது இவ்விஷயம்.

குதிரை முதலிய வாஹனங்கள் ஓடும் விசையால் அவ் வீதிகளில் வீசியெழும் தூய்மையான தூளிகளை தேவாதி தேவர்களும் தம் சிரங்களால் தாங்கிச் சிறப்புறு கின்றனர். 27

அப்பால் அப்பட்டணத்தின் ஒரு பாரிசத்திலுள்ள மாந்தோப்பிலிருந்து மந்தமாய் அசைந்து வீசுவதும், கம்பா என்னும் தீர்த்தத்திலுள்ள[1] தாமரைக் காடாகும் மடந்தையினிடம் மோஹங்கொண்டதுபோல் அதைப் பரிசித்து வருவதும், சிவபெருமானது[2] சிரஸ்ஸிலிருக்கும் இளம்பிறையின் பனித்துளிகளை யேந்தி யிறைப்பதுமான சுகந்தமுள்ள மாருதமானது அன்பார்ந்த நண்பனைப் போல் நெடுந்தூரத்திலிருந்து நாடிவந்துள்ள உன்னை அவசியம் அணுகிவந்து உபசரிக்கப்போகின்றது. 28

கமலாஸனரின் காதலியும்,[3] கவிகளான உங்கள் குலத்திற்கு இறைவியுமான[4] கலைமகளை எழுத்துக்களின் தொகுதிகளைப்போல் எழுவகைப் பெரு வெள்ளங்களாய் உருவெடுத்து[5], அப்பட்டணத்திற்கு இடையில் பளிங்கு

---

1. அடுத்த சுலோகத்தில் குறிக்கப்படும் வேகவதி என்னும் ஆற்றின் கிளைகளுள் ஒன்று கம்பா என்பது.

2. ஏகாம்ரநாதன் என்னும் பரமசிவன்.

3. கமலாஸனரின் காதலி–பிரம்மாவின் மனைவி.

4. கலைவல்லோர் குலத்திற்குத் தலைவியான ஸரஸ்வதி என்று ஒரு பொருள். மேலும் சகிகள் என்றால் நீர்வாழும் பறவைகள்; இங்கு முக்கியமாய் அன்னப்பறவைகள் எனக் கருத்து; அவற்றின் குலத்திற்கு இறைவி; ஸரஸ்வதிக்கு ஹம்ஸபக்ஷி வாஹனமாகை யால், அப்பறவையினத்திற்குப் பொதுவாகவே ஸரஸ்வதியைத் தலைவியாகக் கூறுகிறார்.

5. ஸரஸ்வதியே வேகவதி யென்னும் நதியுருவமெடுத்து வந்தாள் எனப்படுகிறது. அது எழு கிளைகளாப் பெருகி ஓடிய

போல் தெனிந்து இனிய சுவையுடன் அழகாக வேகவதி யென்னும் பெயர் பூண்டு பிரவஹிக்கின்றாள்; அந்நதி யுருவங்கொண்ட மேன்மை தங்கிய நாமகளே, இரு கரை களிலும் வீற்றிருக்கும் வெவ்வேறு தேவதைகளால் சூழப் பட்டு வணங்கி வழிபாடு செய்யப்படுகிறாள். 29

மானிடரின் மாசுகளை விலக்கும் வாக்கென்னும் தேவியாரின் பிரதிதார் உருவான ஸாரஸ்வதமென்னும்[1] அப்புனித நீரில் தோஷமற்ற முனிவர்களோடு கூடவே நீராட, அதனால் இன்னும் உனது தேஹம் நன்கு துலங்கப்போகின்றது; ஆகவே உனது மாசு மறுவற்ற உடலைப்போலவே களங்கமற்றுள்ள உள்ளத்திலும் பிர பஞ்சமனைத்தும் பிரகாசமாய் விளங்க, நீக்கவியலாத

தாகவும் சொல்லப்படுகிறது. அவை சுக்திகா, கநகா, ஸ்ருப்ரா, கம்பா, பேயா, மஞ்ஜுளா, சண்டவேகா என்பவை. சப்தரூப மான வாக்கும் (ஸரஸ்வதியும்) உயிரெழுத்துக்கள், கவர்க்கம் (க, வ, ம, ஖, ஜ), சவர்க்கம் (ச, ஶ, ஜ, ஷ, ஸ), டவர்க்கம் (ட, ட, ட, ட, ண), தவர்க்கம் (த, ய, ஔ, ய, ந), பவர்க்கம் (ப, ஹ, வ, ஹ, ஃ), அந்தஸ்த-ஊஷ்மாக்கள் (ய, ர, ல, வ; ள, ஷ, ஸ, ஹ) என்கிற எழு பிரிவுகளைப் பெற்றது. மேலும் ஸரஸ்வதி தேவியின் பிரஸாதத்தினால் (அனுக்கிரஹத்தால்) தோன்றும் கவிதை, தெளி வாகவும், செவிக்கு இனிதாகவும், எளிய நடையுள்ளதாகவும் இருக் கும். அதுபோலவே வேகவதியின் பிரவாஹமும் தெளிந்தும், இனி தாகவும், அழகிய ஓட்டமுள்ளதாகவும் இருப்பதாக வர்ணனை. இவ்வளவு புனிதமான வாக்தேவியின் மற்றோர் உருவாய் அமைந் திருப்பதால் இந்நதி இதன் கரையில் கூடியுள்ள பல தேவதைகளா லும் சூழப்பட்டும் தொழப்பட்டும் வருவதாகக் கூறப்படுகிறது. ஸரஸ்வதி தேவிக்கும் இந்த நதிக்குமுள்ள குணங்களை இவ்வாறு இந்த ச்லோகம் சிலேஷையினால் விளக்குகிறது.

1. ஸரஸ்வதிக்குச் சம்பந்தப்பட்டதாகையால் அங்குள்ள தீர்த்தம் ஸாரஸ்வதம் எனப்படுகிறது.

நிர்மலத்தன்மையை உள்ளும் புறமும் நிரம்பவும் நீ பெறுவாய்.[1] 30

அருங்குணமமைந்த அன்னமே, அந்தக்கரையில் நான்முகனுக்கு யாகவேதியாய் அமைந்திருந்த அத்திகிரியென்னும் குன்றம் ஒன்று தமிழ்நாட்டைத் தைவலோகம் போலச் செய்துகொண்டு விளங்குகின்றது: அதற்கு அருகில் இருந்து வாழ்பவர் தம் உடலை விடுத்த பின் தீமாகுணத்தை முற்றிலும் அகற்றிய பரவாஸுதேவனது பரமபதத்திலிருக்கத்தகும் பாக்கியவான்களாகிறார்கள்.[2] 31

உலகத்தின் உற்பத்திக்குக் காரணமாயுள்ள கடவுள் அந்த யாக வேதியில் இளந்தளவ மாலைகளால் தன் ஒப்பற்ற ஒளியை ஓங்கி வளரச் செய்தவாறு நீலநிறமானதோர் அபூர்வ அக்கினியை யொப்ப[3] ஆவிர்ப்பவித்திருக்கிறார்;

---

1. ஸம்ஸார ஸம்பந்தமான ஸகல பாசங்களினின்றும் விடுபட்டவர்கள் முக்தர் எனப்படுவார்கள்; அவர்களுடைய உட்லும் உள்ளமும் படிகம்போல் பரிசுத்தமானவை; இந்த ஹம்ஸமும் வேகவதியில் ஸ்நானம் செய்வதால் அவ்விதம் ஆவதாகக் கருத்து.

2. கயொயா உயோரா சாயா காஶீ காஞ்சீ ஹ்ருவந்திகா। வாரீ உவாரவதீ வைவ ஸப்தைதா உக்தியாயகாः—அயோத்தி, மதுரை, மாயா, காசி, காஞ்சி, அவந்தி, த்வாரகா என்னும் இவ்வேழும், மோக்ஷமளிக்கும் புனிதமான நகரங்கள்" என்று சாஸ்திரம். "முத்தி தரும் நகரேழில் முக்கியமாம் கச்சிதன்னில்" என்று மற்றோரிடத்தில் பூதேசிகனே மொழிந்திருக்கிறார்.

3. அக்னியை இயற்கையில் சிவப்பு நிறமாய் வர்ணிப்பது வழக்கம்; இத்திருமாலை அக்னிக்குச் சமானமாக வர்ணிக்கிறார்; ஆனால் இந்த அக்னி இயற்கையில் கருநிறம்; ஆகவே அபூர்வமான

அத்திருமால் திவ்யபோகங்களிலும்,[1] உலகங்களை ஈசனாயிருந்து ஆளும் பணியிலும் தனக்கு அன்பார்ந்த இணையற்ற துணையாயிருந்துவரும் ஸ்ரீதேவியின்[2] கடைக்கண் பார்வைகளின் காந்திகளால் இன்னும் அதிக நீலநிறம் பெற்றுவினங்குகிறார். 32

அவ்வத்திகிரியில் திருமகளாகும் மின்னெளியால் துலங்கும் திருமேனியைப் பெற்று, மரகதமணிபோல் கரும்பசுமை நிறங்கொண்டு, கருணையாகும் குளிர்ந்த

(இயற்கையிற் காணக்கூடாத) அக்னியெனப்படுகிறது. யாகத்தில் அளிக்கப்படும் ஹவிஸ்ஸுக்கள் என்னும் ஹோமவஸ்துக்களைக் கிரஹித்துக்கொள்வதால் அக்னியை 'ஹவ்யவாஹன்' என்று கூறுவர்; பிரம்மதேவன் நிகழ்த்திய யாகத்தில் பகவான் தானே ஹவிஸ்ஸுக்களை ஏற்றுக்கொண்டதால் இவருக்கும் 'ஹவ்யவாஹன்' என்னும் பெயர் ஏற்றதாய்விட்டது; அதனாலும் இவரை அக்னிக்கு ஒப்பிட்டார் கவி. துளஸி மாலைகளால் அவரது நீலநிறம் அதிகமாயிற்று என்றும் பொருள். தாரமஸ்ய நிவோ்தா ஸ்யாத்இதி ஹவ்யவாஹ:—"பிரம்மதேவன் வேள்வி செய்த போது அவ்வேதியில் கருநிறமான ஹவ்யவாஹனனைத் தோன்றியவர்" என்று ஸ்ரீதேசிகனே வரதராஜபஞ்சாசத்திலும் இதேவிதமாய் வர்ணிக்கிறார்.

1. லீலாவிபூதியில் பகவானும் பிராட்டியும் அனுபவிக்கும் இன்பங்கள் எனக் கருத்து.

2. நஏ: ஸ்ரீராஜ்ஞாயகைர்யஜ்ஞவிஹரணவிஹிதை:
ரமயோர்மிதவ்ய விவேஷ்ய நிதிர்நாந்தரீயம் ஜகத்— "ஸ்ரீதேவியின் புருவநெறிப்புகளின் வேற்றுமைகளுக்கு ஏற்றவாறு ஆளுபவர் ஆளப்படுபவர் முதலிய பேதங்கள் பிராணிகளுக்குப் பிரபஞ்சத்தில் ஏற்படுகின்றன" என்கிற விஷயத்தை அனுஸரித்தது இவ்வர்ணனை.

தீர் கிரம்பி விளங்கும் அக்காளமேகத்தைக்[1] கண்டு நீ மிவருண்டு விடவேண்டாம்[2]; எனினில் உண்மைபால் நிம் மலமான நித்யஸரிகள் எனப்படும் தேவஹம்ஸங்களால்[3] நிக்யழும் பணியப்பெற்ற திருவடிகளையுடைய அத்திரு மால் முன்னொருகால் தானே ஹம்ஸமாய் உருவெடுத்து உங்கள் குலத்திற்கே மூலபுருடராகவும் தோன்றியவ ரன்றோ?[4] 33

---

1. காளமேகம் என்பது இங்கே பகவானைக் குறிக்கிறது. "..... யகூத்ஸவிஷ்ணுஸ்துவி தஉ தஸ்மாஉஸ உத்யகாயம்!..... காருண்யாவம் தீஷபரிவஸ்ஸு கூரும்பவம் உஷஸ்ஸு" என்கிற வேதவாக்கியத்தை வாணனை அனுஸரித்தது இது. "காளமேகத்திற்கு இடையிலுள்ள மின்னொளிபோல் பிரகாசிக்கும்"—நீலதாயஉயஸ்ஸுஸ விஷ்ணுஸ்துவெவ ஸாலுரா— என்கிற இதுபோன்ற சுருதிவாக்யமும் கவனிக்கத்தக்கது. 'பத கரை மாற்றுத் தங்கம்போல் விளங்குபவளும், நிலத்துப் பிரகாசிக்கும் மின்னொளிபோல் தோற்றுபவளுமான பூமாதேவியினால் அருகில் உபசரிக்கப்பட்டு வரும் நீலமேகத்துக்கு நிகரான திருமேனியுடன் விளங்குகிறார் வரதன்'—வலவுஆநஃ ஸிரியா வோஸுவ ஸாதகூரஸ்ஸ நிலஸ்ரியா! நீலு ஜீஉத லஸ்காஸு: ஸ்ரிரவிஷ்ணுத்வகாரஸயா— என்று இதைப் போலவே ஹஸ்திகிரி மாஹாத்மியமும் வர்ணிக்கிறது.

2. அன்னப்பறவைகளுக்கு மாரிகாலம் ஆகாதென்றும், ஆகவே நீர்கொண்ட மேகங்களைக் கண்டு அவை அஞ்சி வேறிடம் போய் விடுமென்றும் கவிகள் வர்ணிப்பர்.

3. வைகுண்டத்தில் பகவானைப் பிரத்யக்ஷமாய் எப்பொழுதும் ஸேவித்து வரும் நித்திய ஸூரிகளை ஹம்ஸங்கள் என்பார்கள்.

4. பகவான் ஒரு ஸமயம் ஹம்ஸரூபமாய் அவதரித்ததாகக் கூறப்படுகிறது.

அத்தேதவாதிநாதன் உன் யஜமானனை பிரம்ம தேதவன் வேள்விபிலிட்ட தேறாடங்களின் ஸாரங்களை நன்கு அருந்திபவர்;[1] அரு மறைகளினத்துக்கும் அவதேர களங்க மற்றதேதார் கண்ணினைத் தகுந்தவர்;[2] அவரைக் காணதேல் கண் படைத்தவின் பாக்கியமாம்; அத்தேதவன் பக்தர் களுக்குப் பெருமிதமாக வரனளிக்கும் விதேசஷகுணம் பொருந்தியவையும்;[3] இனிமையில்லை அழுதப்பெருக்குக்கு இணையானவையும், ஆனந்தப்பெருக்கை அறிவிப்பவையு மான தன் கடாக்ஷங்களால் தன்னை வணங்கி நிற்கும் உன்னை இனிது வரவேற்பார். 34

திருமகள்நாதனை அத்தேதவராஜன் வியர்த்து நனைந்திருப்பதும், ஆகவே தேன் சொரியும் தாமரை மலர்போன்றிருப்பதுமான[4] தேதவியின்[5] திருக்கரத்தைப் பற்றிக்கொண்டு, மற்றொரு கரத்திற் கமல மலரொன்றை

---

1. "வவாவரிஜியாயுரவ வாவி தாயாவழுவழு ஈவம் வராஜவ ஈழுவி தேவாவ்வரிஹ" என்கிற வாணனை போன்றது.

2. "தியா விநிதி-ரிதாsஹம் விவி விவஉயக்ஷவ-ர் வொதிஹ:"—"வாக்கால் வர்ணிப்பதற்கு எட்டாத மஹிமை பொருந்திய வேதங்களுக்குக் கண்ணயிருக்கும் பகவானே, நான் உம்மால் படைக்கப்பட்டவனன்றே?" என்று மஹாபாரதம்—சாந்திபர்வம்: ஹயசிரஸ்வின் உபாக்யானம்.

3. பக்தர்களுக்கு அபேக்ஷித்த வரனை அளிக்கும் அரிய வள்ளலாகையால் வரதன் என்னும் திருநாமம் அமையப்பெற்றார்.

4. நாயகனது கரத்தின் பரிசத்தினால சுகத்தினல் பூதேவியின்கரத்தில் தானே வியர்வைபுண்டானதால் அத்தேதன் சொரியும் தாமரை மலர்போல் இருப்பதாகக் கூறப்படுகிறது.

5. தேவி என்ப இங்குள்ள பிராட்டியின் மூக்கியப் பெயராம். தேவி என்பதே பெருந்தேவித்தாயார் என்றாயிற்று.

உல்லாஸமாய் ஏந்தியவாறு உத்தியானவனப்பிரதேசத்தில் ஓய்யாரமாய் உலாவுவாராயின், அக்காலே நீயேகின் சிறகடர்ந்த உடலாகும் ஆலவட்டங்கொண்டு நேரில் அவரை வீசியுபசரிப்பாயாக.[1] 35

இங்ஙனம் பகவத்ஸவையிலே மனங்கனிந்தபின் அம்மத்திமதேசத்தைக் கடந்து சோழநாட்டை நோக்கிச் செல்வாயாக; அப்பொழுது செழித்தோங்கி வளர்ந்த கழுகுச்சோலைகளால் நெடுந்தூரத்திலிருந்தே அந்நாடு பசுமையாகக் கண்ணைக் கவருமாப்போல் காணப்படும்; மக்ரங்கள் என்னும் நீர்வாழும் பிராணிகள் பிரவாஹத்தை எதிர்த்து நீந்திச் செல்வதாலே ஒருவாறு தடையுண்டு சிதறும் நீரோட்டத்தையுடைய காவிரியாறு வேகத்துடன் பலவாகப் பிரிந்தோடுவதால், அந்நாடு இடையிடையே அவ்வாற்றுப் பெருக்கால் சீரான பிரிவினைகளைப் பெற்றுச் செழித்து விளங்கும்.[2] 36

---

1. "அக்கச்சிமாநகரில் ஒருக்கால் ஆற்றங்கரையில் அறுவகைப் பருவங்களிலும் உண்டாகும் உத்தம மலர்கள் பூத்து நிரம்பிய உத்தியானவனத்தில் உல்லாஸமாக ஸ்ரீவரதராஜன் பிராட்டியோடு உலாவி வரும்போது பக்ஷிராஜனை கருத்மான் தன் சிறகுகளை விரித்து அவர்களது சிரஸ்ஸுகளுக்குமேல் பறந்தவண்ணம் வீசிக்கொண்டு ஆலவட்ட உபசாரம் செய்தார்" என்று ஹஸ்திகிரி மாஹாத்மியத்திலுள்ள வரலாற்றை இவ்விஷயம் குறிப்பிடுகிறது.

2. "ஸ்யாதேதாவதமாஉய ஜநபதம்" என்று பின்வரும் 42-ம் ச்லோகத்தின் வர்ணனையும் இத்துடன் ஒப்பிட்டுப்படிக்கக் கூடியது. [பல குழந்தைகளைப் பெற்ற தாய் தன் எல்லாக் குழந்தைகளையும் ஒரே சீராகப் பாராட்டி வளர்ப்பதுபோல் இக்காவிரிநதியும் தன்னைச்சார்ந்துள்ள பல பிரதேசங்களையும் தன் கிளைகளாகும் கைகளால் ஒரு சீராகப் போஷித்து வளப்பமாக வளர்த்திருக்கிறது என்று இந்த ச்லோகத்தின் உட்கருத்தாகும்.]

அன்னமே, அத்தேயத்தில் அம்புயம்போல் அழகிய கண்களைப் பெற்ற மங்கையர்கள் இளவயதிற் கேற்ப இறுமாப்புடன் இனிது பேசுமியல்பினராயிருப்பர்; மஞ்சள் கலந்து மணம் வீசும் கந்தப்பொடிப் பூச்சுகளால் அந்திப்பொழுதின் சென்னிறச் சீர்மையையும், பாக்குப் பூம்பாளைகளைப் பாங்குடன் உள்ளடக்கிய தம் கூந்தல்களால் வெண்ணிலவுடன் கலந்து கலவரம் புரிவது போலுள்ள நல்லிருளின் நிலைமையையும் பெற்று விளங்குவர்; அப்பெண்மக்கள் ஊஞ்சலேறி உல்லாஸமாய் ஆடிக் கொண்டிருக்க உன் கண்களுக்கு மிகக் களிப்பூட்டப் போகின்றனர். 37

நீர்வாழும் நிர்மலப்பறவையே, இந்நாட்டிற்கு மேற்றிசைமாய் மேதினிக்கு மேன்மை பொருந்திய விநோதத் திலகம் போல் விளங்கும், ஆற்றுப் பாய்ச்சலே ஆதாரமாகக் கொண்டுள்ள வர்ஷம் என்னும் ஸ்தலத்தை நீ கடந்தேக வேண்டும்; ஆங்கு அதிக உயரமில்லாமையால் புஷியிற் சிறிது புதைந்துள்ள கைலமலையெனத் தோற்றுவதும், அவனியின் அடிப்புறத்திலிருந்து மேலெழுந்து வரும் ஆதிசஷன் போன்றுள்ளதுமான ச்வேதாத்ரி என்னும் குன்றம்[1] ஒன்றை அருகிற் காண்பாய். 38

அத்திவ்ய தேசத்தில் தன் ஒளித்திரளால் அடியார்களின் அஞ்ஞானமாகும் அந்தகாரத்திரளை அகற்றிப் போடும் பரஞ்ஜோதி யொன்றுண்டு;[2] ஸ்ரீதேவியின் அன்பில் அனவரதமும் ஈடுபட்டுள்ள இப்பெருமான் சுயஞ்

---

1. ச்வேதாத்ரி - வெண்மையாயிருப்பதாலேயே கைலாயமலைக்கு இது ஒப்பிடப்படுகிறது. இந்த கூந்திரத்தைத் திருவெள்ளறை என்று வழங்குவர்.

2. இங்குள்ள பகவன்மூர்த்திக்குப் புண்டரீகாக்ஷன் எனப் பெயர்.

ஜோதியாய் அமிதமான ஐச்வர்யத்திற்கும் ஆதாரமா யிருந்துகொண்டு, ஆத்மஞ்ஞான மூள்ளவர்களால் விசேஷ மாய் விரும்பி ஸேவிக்கக் கூடியவராம்;[1] அவரை வணங்கி வழிபாடு செய்யும் உனக்கு அச்சுயஞ்ஜோதி சுப பரம் பரையை அதிவிரைவில் அளித்து விடும். 39

பிறகு அத்தேவனுடைய தேஹகாந்திபோல் நீல நிறமாயுள்ளதும், செழிப்பான நிழல் நிரம்பியதும், நீலி யென்னும் யகூஷிணியிஞல் இரகூஷிக்கப் பெற்று என்றைக் கும் வளமாய் விளங்குவதுமான[2] அவ்விஸ்தாரமான வனத் தில் உலாவி அவ்வடவியின் தன்மைகளை நன்கு அறிந்து கொள்வாயாக[3]; அனவரதமும் அரம்பையர் இருந்து இன்பம் அனுபவிப்பதற்குரிய அக்கானகத்தைக் கண்ட தும், நின் மனம் வானுலகிலுள்ள நந்தனவனச் சோலையை யும் சிறிதாகக் கருதும். 40

---

1. "பராஸ்ய ஶக்தி-ர் விவிதைவ ஶ்ரூயதே, ஸ்வா ஶாவிகீ ஜ்ஞாநவையகி்ரபா ச" என்கிற சுருதிவாக்யத்தின் உண்மையை விளக்குவது இவ்விஷயம். [இப்பரஞ்ஜோதியாகும் தீபம் தன் கல்யாண குணங்களாகும் நூல்வர்த்தியையும், திருமக ளின் அன்பாகும் எண்ணெயின் பற்றுதலையும் எப்பொழுதும் பற்றிக் கொண்டே பிரகாசிப்பது; ஆகவே அளவற்ற ஒளித்திரளால் அஞ்ஞானமாகும் அந்தகாரத்திரளை அகற்றவல்லது; இத்திவ்ய தீபத்தைக் கல்விக்கண் படைத்தவர் விரும்புவர் என்கிற அசப் பொருளும் இதற்கு உண்டு.]

2. 'நீலீபுஷ்ப ஸ்தபகலலிதம்' என்றும் பாடமுண்டு. அப் பொழுது 'நீலி என்னும் பூங்கொத்துகள் நிரம்பி சோத்தியாகக் காணப்படுவதுமான' என்று அதன் பொருள்.

3. இவ்வனம் வெகு செழிப்பாகவும் வனப்பாகவும் இருப்ப தாகவும், நீலி என்னும் யகூஷிணி இதைக் காத்து வருவதாகவும் ச்வேதாத்ரி மாஹாத்மியம்.

அவ்விடத்தில் கழுகுச்சோலையில் வீசும் வாயுவானது வெவ்வேறு வகையான புஷ்பப்பொடிகளால் விசித்திரமான விதானத்தை விரித்தமைத்தும், கழுகுப்பூம்பாளைகளாகும் கவுரிகளை மெதுவாக வீசியும், திரளாக மலர்களைச் சொரிந்து பூதலத்தைச் சுகமாக அடிவைத்து நடப்பதற்குரியதாக மிருதுவாகச் செய்தும் மன்மதனுக்குப் பரிசாரக முறையிற் பெரும்பாலும் பணிவிடை செய்வதாகத் தோற்றும். 41

அருங் குணமமைந்த அன்னமே, அதற்கப்பால் அச் சோழமண்டலத்தை வெள்ளப்பெருக்குகளின் வேகத்தால் வெவ்வேறுகப் பிரித்தமைக்கும்[1] ஸஹ்ய கன்னிகை யென்னும் காவிரியாறு தன் பெருமையினைத் தேவகங்கையையும் புறக்கணிக்குமாறு ஆங்கு ஓடுகின்றது; அந்நாட்டிற் செழித்துள்ள நாமக்கரும்புகள் அவ்வப் பருவங்களிற் பக்குவமடையுங்கால் பளீரென விறியும் கணுக்களிலிருந்து உதிரும் முத்துத் திரள்களால்[2] அந்தியினில் இடையிடையே வெண்ணிறமணல் திடருகள் அடர்ந்தாற்போலக் காணப்படும். 42

ஸஹ்யபர்வதத்தின் அடிவாரமாகும் கந்தையின் மடியிலிருந்து அப்பொழுதே ஆழ்கடலாகும் அன்பார்ந்த கணவனது இல்லம் நோக்கி வாயுவாகும் உடன்பிறந்

---

1. முன்பு 36-ம் பத்யத்தின் கருத்தும் சற்றேறக்குறைய இவ்விதமானதே என்பது கவனிக்கத்தக்கது. சோழநாடு பல பிரிவினைகளைப் பெற்றிருப்பது காவிரி பலவாறு பிரிந்து எல்லைகளை யேற்படுத்துவதாலேயே என்பது கருத்து. (ஸஹ்ய கன்னிகை என்பதன் கருத்து அடுத்த பத்யத்தில் விளங்கும்.)

2. உயர் ஜாதியான கரும்புகள் முதிர்ந்தபோது அவை வெடித்து அவற்றிலிருந்து முத்துக்கள் கிளம்பும் என்று கவிகள் வர்ணிப்பது வழக்கம்.

தேனல் செலுத்தப்படும் அந்தியாகும் நங்கையின் மீது, செழித்துள்ள கழுகுச் சோலைகளாகும் தோழர்கள் தேனை நெழுகும் தம் பூவிதழ்களை அதிகாலையிற் சொரிந்து உபசரிக்க, உன்போன்ற பக்ஷிகளாகும் பக்ஷமுள்ள அந்தணர்களால் இன்மொழிகொண்டு ஆசிகள் கூறி வழியனுப்பப்பெற்று, அதனல் புன்னகை புரிவதுபோலப் புலப்படும் அக்காவிரிக்கன்னிகையை மணம் பொருந்திய மதுவைச் சொரிந்து அப்பாக்குச் சோலைகள் பாங்காகச் சுகந்தம் தரிக்கச் செய்கின்றன போலும். [1] 43

அவ்விடத்தில் சந்திரனது பிணியைத் தீர்த்து அவனைத் துலங்கச் செய்ததால் [2] சந்திர புஷ்கரிணி என்னும் பெரும்புகழ் பெற்ற பொய்கையின் சீர்மையைக்

---

1. புதிதாக மணமுடித்த ஒரு நாட்டுப் பெண்ணை அந்தணர்கள் வேத மொழிகள் கொண்டு ஆசீர்வதித்த பின், அவளைத் தன் தந்தையினிடமிருந்து ஸஹோதரன் முதலிய உறவினர் கணவன் வீட்டுக்கு அழைத்துப்போய் விடுவதும், அங்கு நண்பர்களும் பிறரும் புஷ்பங்களையும் பன்னீர் முதலிய வாஸனைத் திரவ்யங்களையும் வீசி அவளைச் சந்தோஷப்படுத்துவதும். நூதன யௌவனப் பருவத்திற்கேற்ப புன்சிரிப்புடன் அப்பெண் தன் நிசாந்தம் என்கிற அந்தப்புரம் செல்வதும் உலக வழக்கம். அவ்வாசாரத்தை இங்கு ஸஹ்யபர்வத கன்னிகை யெனப்படும் காவிரியாற்றுக்குக் கற்பனையாக ஏற்றவாறு இசைத்து வர்ணித்திருக்கிறார் கவி. [காவிரி ஒரு கன்னிகை. ஸஹ்யபர்வதம் அதன் தந்தை. அதன் அடிவாரம் தந்தையின் மடி. கடல் காவிரியின் கணவன். வாயு காவிரியை அழைத்துச் செல்லும் உடன் பிறந்தோன். பக்ஷிகளின் ஆர்ப்பரிப்பு அந்தணரின் ஆசிமொழி. பாக்குச் சோலைகள் காவிரியின் நண்பர்கள். அம்மரங்களிலிருந்து உதிரும் பாக்குகள், புஷ்பங்கள், தேன் முதலியவை கன்னிகையை மணச்சடங்கில் வரவேற்கும் உபசாரம்.]

2. சந்திரனுக்கு ஏற்பட்டிருந்த இராஜயக்ஷ்மநோய் இக்குளத்தில் அவன் குளித்த பிறகு தீர்ந்ததாகக் கூறப்படுகிறது.

கண்ணுறுவாய்; சுத்தியைக் கருதி, சுற்றிலும் வேறு பல புண்ணிய தீர்த்தங்களாலும் சூழப்பெற்று,[1] நீர்விளையாடும் தேவமாதர்களது கூந்தல்களிலிருந்து பற்றிய ஸுகந்தங் கமழப்பெற்றது அக்குளம்; அது உன் இனத்தார்க்கு மானஸப்பொய்கையிலும் மனவெறுப்புண்டாக்கும் மேன்மை பொருந்தியது. 44

அப்ப அன்னமே, அப்புஷ்கரிணியின் கரையில் அமைக்கப்பட்டுள்ள சான்றோரால் தொழப்படுவதான சேஷபீடம் என்னும் எம்பெருமானது ஆஸனத்தை[2] அந்தரங்க பக்தியுடன் உடல் குனிந்து பணிவாயாக; அங்குதான் எங்கள் குலதனமாய் அயோத்தியில் தொன்று தொட்டு வீற்றிருக்கும் ஸ்ரீரங்கநாதன் பள்ளிகொள்ளப் போவதாக முனிவர்கள் மொழிந்துள்ளனர்.[3] 45

---

1. அச்வத்த தீர்த்தம், வகுள தீர்த்தம், ஆம்ர தீர்த்தம், கதம்ப தீர்த்தம் முதலியவை இக்குளத்திற்கு அருகிலிருந்த வேறு தீர்த்தங்கள்.

2. இதற்கு 'அனந்தபீடம்' என்றும் பெயர்.

3. "சொற்ப காலத்திலேயே உங்கள் நன்மையைக் கருதி ஸ்ரீராமஸ்வரூபியான நான் இராவண வதம் செய்துவிட்டு, விபீஷணர் முயற்சியால் அனந்தபீடம் என்கிற ஸ்ரீரங்கத்திலுள்ள சேஷபீடத்தில் ரங்கநாதமூர்த்தியாய் வந்து வீற்றிருக்கப் போவதைப் பார்க்கப் போகிறீர்கள்" என்று ஸ்ரீமந்நாராயணன் தன்னைக் குறித்துத் தவம் புரிந்த தர்மவர்மன் என்னும் அரசனை நோக்கி மொழிந்தருளியதாகப் பிரம்மாண்டபுராண வரலாறு. [ஸ்ரீராமன் இராவணவதம் செய்துவிட்டு இலங்கையிலிருந்து திரும்பியபின் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் அரங்கநாதப்பெருமாள் பிரதிஷ்டையாகப் போகிற வரலாறு முன்னதாக ஹம்ஸத்தினிடம் இராமனாலேயே குறிப்பிடப்படுவதாக இங்கு கவியின் சற்பனை.]

சுத்த ஸத்வகுணமயமான அத்திவ்ய விமானத்தில்[1] சுயமாய் உதித்து விளங்கும்[2] ரங்கவிமான மென்னும் ஜோதியைப் பற்றி மொழியுங்கால்,[3] பேழையினுள் வைத்த மரகத மணிபோல் அவ்விமானத்தினுள் ஒங்கிப் பிரகாசிப்பவனும்,[4] சேஷசயநத்திற் புயத்தைத் தலை யணையாய் அமர்த்தியவாறு பள்ளிகொண்டிருப்பவனும், நீண்டு நேர்த்தியாயுள்ள நேத்திரங்களைப் பெற்றவ னும், பாற்கடற் புதல்வியின் ஆருயிர்க்காதலனுமான

---

1. ஸதே தவ்தி(வை) என்பதற்கு திவ்யமான ஸாத்விக லோகத் தில் என்றும் பொருள் கூறுவர்.

2. ஸ்வ ஏவ தத்:—(சுயமாய் உதித்து விளங்கும்) என்ப தற்கு ஸ்வயம்வியக்த கேஷத்திரம் என்பது கருத்து. 'ஸத்வே திவ்யே ஸ்வயமுதயதஸ் தஸ்ய தாம்நஃ' என்பது அடியில் வரும் பிரம் மாண்டபுராண வசனத்தை ஆதாரமா யுடையது:—தஸ்ய வஷ்ட் வஹவஸ்ரா தெ தவ்ரோ நவ்ய வெயஸ்ஃ। கூவிராஸீ நூ ஹ ஜாதி ஸ்ரீரஜ்ஜூம் கூஷீரவாமராக்ஷி। ஜ்யம் வீரோ நம் தஸ் ஜ்ரவ்ய ஸ்வயம் வ்ருக்ஷம் உஹயிஷ்ட॥

3. ரங்கவிமானத்தின் அவ்வொளி பரவுவதால் என்றும் தஸ்யாந்தஃ வரஸஜ்ஜாக்ரு என்பதற்குப் பொருள் கூறுவர்.

4. மஞ்ஜுஷாயாம் மரகதமிவ ப்ராஜமாநம் தஜ்ஜந்தஃ (பேழை யினுள் வைத்த மரகதமணிபோல் அவ்விமானத்தினுள் ஒங்கிப் பிரகாசிக்கும்) என்னும் விஷயம் பின்வரும் போஜசம்பு வாக்ய னையை அனுஸரித்தது:—கூஷீராம்பொராயஜ்ஞாராஜ்ஹிதா ரெஷாஹாவாம் வ்யோராதிஹஃ, காயோ நீ ஜ்யோதீக்ஷ்ய ஜ்யாதிஜ் தரோவாஜயதோ—"பகவான் ஓங்கி யெழும் தன் திருமேனியின் கருநிறக்கதிரொளிகளால் பாற்கடலின் உட்புற மனைத்தையும் அப்பொழுதே மலர்ந்த கருங்குவளை மலர்களால் அடரப்பெற்றதுபோல் செய்தவாறு தோன்றினர்." என்றவாறு.

அவ்வாதிதேவனை வாஸுதேவனிடமே என் மனம் தாவி யோடுகின்றது.[1] 46

அன்பார்ந்த அன்னமே, அதற்கப்பால் சோழ பாண்டிய நாடுகளுக்கு இடையில் சோரர்களால் எங்கும் சூழப் பெற்றதும்,[2] செவியைத் துன்புறுத்துமாறு சப்திக்கும் சுவர்க்கோழிகள் சூழ்ந்துள்ளதுமான கானகத்தைக் கடுகவே கடந்தேதகுவாயாக; அதைக் கடந்தபின்பு நீனது இனிய தொனிகளை விளங்கவே வெளியிடலாம்; ஏனெனில் தூயகுணம் பெற்ற கவிகள்[3] எவரும் துஷ்டர்களுக்கு அருகில் வாய்விட்டுப் பேசமாட்டாரன்றே? 47

அப்பாண்டிய நாட்டினில் கருநெய்தல் மலர்போன்ற கண்களைப் பெற்ற மங்கையர்கள் மலரணிந்த தம் மயிர் முடிகள் அவிழ்ந்து விழ, முன்னெற்றிமயிர் மிகவும் அலைந்தாட, காதிலணிந்த குண்டலமணியும் பொலிவுடன் நன்கு தொங்க, முத்துப்போடி படிந்த நெற்றித் திலகமும் தொங்கி யொளிக்க, நன்கு தம் முகங்களை அண்ணாந்து கொண்டு, நீலநிற மாலைபோல நீண்டு ஒளி வீசும் தம் கடைக்கண்களால் ஆவலுடன் பார்த்து இனிது சப்திக்கும் உன்றனை மதித்துப் பாராட்டுவார்கள். 48

---

1. 'காவேரீ விரஜா லெயம லெவகுணம ரஜு ஸந்நிரோதி ஸ வாஸுதெவொ ரதிஹுஸ: வ்ரதகூம வரஜ வஜே' என்கிற பரமேச்வர ஸம்ஹிதா வசனத்தின் கருத்தை அனுஸரித்தது இப்பத்யம்.

2. சோர நாடு அல்லது முன்னூல் கள்ளர் வஸிக்கும் காடுகளடர்ந்த நாடு.

3. கவிகள்—நீர்வாழும் பறவைகள்; தூய குணம்—வெண்ணிறம், சிறந்த குணம். துஷ்ட ஜந்துக்கள் சூழ்ந்த இடங்களில் உன் போன்ற உயர்ந்த ஜாதி பக்ஷிகள் சப்திப்பது கெடுதி. கவிகள் என்றூல் கல்விமான்கள். அவர்களும் துஷ்டர்களுக்கு அருகில் ஏதும் வாக்கு வன்மையை விளக்கமாட்டார்.

அப்போல் ஸுந்தரபாஹு[1] என்னும் விஷ்ணுவை[2] எப்பொழுதும் வீற்றிருக்கப் பெற்றதும், வணங்கி வழிபாடு செய்பவரின் உருவெடுத்த பாக்கிய மெனத் தகுந்ததுமான விருஷபாத்ரி என்னும் க்ஷேத்திரத்தை[3] விளம்பம் செய்யாது சென்னி வணங்கிச் சேவிப்பாயாக; அப்பர்வதத்தின் மீதுதான் பலிசக்கரவர்த்தியை வலிய வென்றிட்ட உலகளந்த அவ்வுத்தமனுடைய தண்டைச் சிலம்பிலிருந்து சொரிந்த தேவகங்கையின் திவ்யநீரானது[4] பரமசிவனது சடைமுடியின் பற்றுதலைச் சற்றும்பெறுது புவிதனில் வீழ்ந்து புனிதமாய் விளங்கி[5] வருகின்றது. 49

---

1. ஸுந்தரபாஹு என்கிற இப்பெருமாள் அழகர் என்றும், கள்ளழகர் என்றும் வழங்கப்படுகிறார்.

2. உலகமனைத்தையும் மூன்று அடிகளால் அளக்கக்கூடியவாறு எங்கும் வியாபித்த திருமேனியைப் படைத்த திருமால் என்பதைக் காட்டும், 'ஜ்ஞ விஷ்ணுர்விசக்ரமே ததோ யாநிஜ்ஞ யே பதா' என்னும் சுருதி வாக்கியத்தைக் குறிப்பது இந்த விஷ்ணு சப்தம்.

3. 'தம் வந்தே ஸுந்தராவ்யம் வநமிரிநிலயம் வேணுரீகாயதாக்ஷம்' என்றும், 'ஸுந்தராயதஸுஜம் ஸுஜாதவிஹக வ்யக்ஷவக்ஷஸ்தலஸ்ரீ யதஸுவ்யயித நலவஸுராவமாதீயர்மயிர்தவலயவ்ரஜம் விஷ்ணுஃ' என்றும் ஸ்ரீவத்ஸாங்கமிச்சர். விருஷபகிரி என்கிற இம்மலையை 'வநகிரி' என்றும், 'திருமாலிருஞ்சோலை' என்றும் வழங்குவர்.

4. இங்குள்ள இத்தீர்த்தம் 'நூபுரகங்கை' அல்லது 'சிலம்பாறு' எனப்படுகிறது. த்ரிவிக்ரமாவதாரத்தில் பிரம்மதேவன் தன் கமண்டல ஜலத்தினுல் திருமாலின் திருவடியைச் சோதிக்க, அது அவரது சிலம்பம் பட்டுச் சிதறி ஆகாயகங்கையுருவாக விருஷபாத்ரியின்மீது வீழ்ந்ததாகப் புராண கதை.— "தீர்விக்ரமவ்ருத்தாந்தே விஷ்ணோர்நகரவாஸிநி தீர்த்தம் நாம்நாஜ்ஞாதிர்மயி ஸர்வாகதம்."

5. சிவனது சடைமுடியின் பரிசமற்ற இப்புண்ணிய தீர்த்தம் கங்கையினும் புனிதமான தென்றபடி.

பிறகு வருவது பாண்டிய நாடு; முன்னொரு கால் மூக்கண்ணனிடமிருந்து அஸ்திரங்களைப் பெற்ற அரசர்களின் அரும் பிரபாவத்தினால் காமேமங்கள் அங்கு காராகிருஹத்திலிட்டுப்[1] பெற்றன; அம்மேகங்கள் அனுதினந்து அஞ்சி கால மழை பொழிந்து வரவே பாங்காகச் செழித்து வளர்ந்த பயிர்களைப் பெற்றிருக்கும் அந்நாடு;[2] புண்ணிய ஸ்தலங்களைப் பெற்று அன்வரதமும் அழகால் அளகாபுரியுடன் போட்டியுறும் நாட்டுப்புறங்களாலும், நகரங்களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ள[3] அத்தேசத்தைப் பார்த்துக் கொண்டே பறந்தேகக் கடவாய். 50

அதற்கப்பால் சிப்பித்தீரங்களிலிருந்து வெளிவந்த, நல்முத்து ராசிகளாகும் மணல்மேடுகளைப் பெற்றதும், ஆகவே தாரகைகள் நிரம்பிய வானமண்டலம் போல் தோற்றுவதுமான தாம்ரபர்ணி நதியை நாடிச் செல்வாயாக;

---

1. காராகிருஹம்—சிறைச்சாலை.

2. "முன்னொரு கால் பாண்டிய நாடு இந்திரனுடைய கோபத்திற்குள்ளாயிற்று; அதனால் மழையின்றி பஞ்சத்தினால் பிரஜைகள் துன்பமனுபவிக்க நேர்ந்தது; அப்பொழுது அந்நாட்டு அரசன் ஹாலாஸ்யநாதனென்னும் சிவனைக் குறித்துத் தவம் செய்து, அவரது அனுக்கிரஹம் பெற்று, மலயபர்வதத்திற்கு வந்த காளமேகங்களையெல்லாம் பிடிக்கவும் அவற்றைச் சிறையிலிடவும் வல்லமையைப் பெற்றான். அதன் பிறகு மேகங்கள் அம்மன்னவனின் நாட்டில் கால மழை பொழிய இசைந்து நாடு ஸுபிக்ஷமாய் வளம் பெற்றது" என்று ஹாலாஸ்ய மாஹாத்மியத்திலுள்ள வரலாறு.

3. நீர் நிலங்களின் வளப்பு, செல்வத்தின் செழிப்பு, தர்மங்களின் பெருக்கு முதலியவற்றால் அந்நாடு பெருமை பெற்றது என்றும், நகரங்களைப் போலவே கிராமங்களும் மற்றுமுள்ள நாட்டுப் புறங்களும் அளகாபுரிபோல் வளம்பெற்று விளங்கின வென்றும் கருத்து.

ஆழ்கடல் அருந்திய அகத்திய மாமுனிவர் ஆங்கு அருகி
லிருந்து வருவதால், நியதமாய் நிர்மலமாயுள்ள அதன் நீரா
னது[1] உன்றனை நோயறச் செய்து,[2] முக்கைப்போலவே
மூற்றிலும் தலங்கத் தாய்மையாக்கிவிடும். 51

தாம்ரபர்ணியாகும் அத்தருணியின் தாமரைமலரா
கும் முகத்தை நீ இவ்விடப்படி இனிது அருந்தி யனுப
வித்து மனங்களித்தவனுய், அன்பு மிகுந்து அசைந்தாடும்
புயங்களைப்போல் அலைந்தெழும் அதன் அலைகளால்
தழுவப் பெற்று, அதன் மணற்றிடரில் அங்கங் குளிர
அமர்ந்திருந்துவிட்டு, சந்தனமரங்களடர்ந்த மலயபர்வ
தத்திலிருந்தெழும் மந்தமாருதத்தினுல் வீசியுபசரிக்க
வும் பெற்றவனுய், கடலைக் கடந்தேக முயலுவதற்கு முன்
களைதீரச் சுகித்திருப்பாயாக. 52

அவ்வாற்றுக்குச் சிறிது இடது புறமாகச் சென்ற
தும், கடலின் கரைபோரத்தை அருகிற் காண்பாய்;
காளிப்பனைகளாலும் கருநிறப்பச்சிலைச் செடிகளாலும்
செழித்துக் கருமையா யுள்ளதும், பலவாறு மேலெழும்
அலைகளால் தொடுத்தாற்போல ஒதுக்கப்பெற்ற நல்முத்து
வரிசைகளால் நன்கு விளங்குவதும், தாழம்பூப் பொடிகள்

---

1. தென்திசை அகஸ்தியருக்கு இருப்பிடமென்றும், அகஸ்
தியநக்ஷத்திரம் உதித்திருக்கையில் எப்பொழுதும் வரி குளம்
முதலியவற்றிலுள்ள தண்ணீர் தெளிவடைந்து தோஷம் நீங்கிய
தாக ஆகிறதென்றும் கூறுவர். அமரஸிம்ஹரும் நிவி-ஶுத்-
'அகஸ்திய நக்ஷத்திரம் உதிப்பதால் தண்ணீர் சரத்காலத்தில்
தோஷமற்றதாக ஆகிறது' என்று வாக்கிட்டார்.

2. யெனி நாஶிதந வாவாரி விஶயம் யாஜ்ஞ
வால்கியர்: தெனெ நோதக்ஷு ஶுத்யந்தி—"எவர் உதிப்பதால்
பாவங்கள் நீங்கி. நோய்களும் தீருகின்றனவோ அப்பெருமை
வாய்ந்த அகஸ்தியருக்கு வந்தனம்" என்று விஶ்வரூப ரஹஸ்யம்.

யடிந்து இரு மடங்காகப் பெருகிய மணற்குன்றுகளடர்ந் ததுமான அக்கடலோரம் நடுப்பிராயத்தினரான உன் போன்ற பறவைகளின்[1] உள்ளத்தைக் களிப்பித்துக் கவர்ந்துவிடும்.[2] 53

நற்குணமமைந்த நண்ப,[3] நாமடிப்பொழுது அவ் விடத்தில் இருந்துவிட்டு, பர்வதசிகரங்களின் இரு புறங் களிலிருந்தும் வழிந்தோடி, நாமிணைசேரும் போன்ற சப்த

---

1. த்வத்ப்ராயாணும் தருணவயஸாம்-என்கிற சொல்லுக்கு இளம்பிராயத்தினரான உன்போன்ற அழகிய பறவைகளுக்கு என்றும், இளம்பிராயமுள்ள உன் போன்ற இரவிகர்களுக்கு என்றும் ஆக இரண்டு பொருள் உண்டு.

2. கருமையான காடடர்ந்த சடற்கரையே 'சியாமா' என் னும் ஓர் உயர் ஜாதி ஸ்த்ரீ; வரிசையாகப் பூணைந்து நிற்கும் தாளிப் பனைகளும் பச்சிலை மரங்களும் அந்த ஸ்த்ரீயின் கருநிறத் தலைப் பின்னல்; கடலின் அலைகளே மடிப்பு மடிப்பாக உடுத்துள்ள உயர்ந்த ஆடை; அலைகளால் ஒதுக்கப்பட்ட முத்து முதலியவற் றின் வரிசையே அதன் மேலணிந்த முத்துச்சரம்; தாழம்பூப் பொடிகளே அந்த ஸ்த்ரீ உபயோகிக்கும் மணமிகுந்த கந்தப்பொடி; அலை பரவிய மணற்குன்றுகளே இடையின் அடிப்புறம்; இவ்வித லக்ஷணங்களமையப் பெற்ற கடலோரம் ஒரு யுவதியைப்போல் தோன்றுவதாகவும், அதைக் கண்டு இளவயதுள்ள அன்னமாகும் யுவா மோஹந் கொள்ளலாமென்றும் இம்முழுப் பத்தியத்தின் உட்கருத்தாம்.

3. இதுவரையில் சொல்ல வேண்டிய மார்க்கம் நாகு கரங் களும் சோலைகளும் அடர்ந்து, ஆங்காங்கு இனிது தங்கிப் போகக் கூடியதாயிருந்தது; இனி செல்லக்கூடிய வழி விஸ்தாரமான ஸமுத்திரம்; அங்கு இடையில் தங்குவதற்கு அனுகூலமில்லை; ஆகவே மனந்தளராமல் அவ்வழியைத் தாண்டிப் போக வேண்டி, அன்னப்பறவையை நண்பனாகவும், நற்குணசாலியாகவும் புகழ்ந்து கூறி அதற்கு உத்ஸாஹம் உண்டுபண்ணுகிறார்.

முண்டு பண்ணிக்கொண்டு தோற்றியாகப் பிரவஹிக்கும் நதிகளாகும் நாண்கயிற்றின் குணத்தைப் பெற்றுள்ள அக் கடற்கரையாகும் கோதண்டத்தை விட்டு, சிறகுகளாற் சிறப்புற்ற நீ அம்புபோல் பாய்ந்து இராவணனது நகரம் நோக்கி விரைவாகப் பறந்தேக வேண்டும்.[1] 54

அன்பார்ந்த அன்னமே, அக்கடல் செம்பவளக்காடுகளால் சூழப்பட்டிருப்பதால் அதைக் காணும்போது அது காட்டுத்தீ பற்றிய கானகம் போலவும், மாலைநேரச் சென்னிறத்துடன் கூடிய வானமண்டலம்போலவும், மத்தகத்திற் சிந்தூரப்பூச்சுடன் கூடிய மத்தகஜம் போலவும், பீதாம்பர மணிந்த புருஷோத்தமன் போலவும், மின்னொளியுடன் கூடிய கார்மேகம் போலவும், கறுப்பும் சிவப்புமான இருவர் ஓருடலாய் அமைந்துள்ள தம்பதி போலவும் புலப்படும். 55

---

1. விற்பிடித்து விடுத்த அம்புபோல் குறித்த இடம் நோக்கி வெகு விரைவாக ஊக்கங்குன்றாது பறந்துபோகவேண்டும் என்பது பொதுக்கருத்து. [பர்வத சிகரங்களின் இருமுனைகளே வில்முனைகள்; அவற்றிலிருந்து நெடுக வழிந்தோடிவரும் நீண்ட நதிகளே குணம் என்னும் நாண்கயிறு; அந்நதிகளின் பிரவாஹ ஓசைகளே நாணோசை; வளைவான கடற்கரையே வில்; பலமான சிறகுகளைப் பெற்ற அன்னப்பறவையே இறகு கட்டிய அம்பு; இலங்கா நகரமே லக்ஷ்யம் அல்லது குறி; அக்கடற் கரையை விட்டு விரைந்து பறப்பதே அம்புபோல் பாயும் வேலை என்பது பத்தியத்தின் கருத்து.] யதா ராவண நிர்முக்தः ஶரः ஶ்வஸநவிக்ரமः। மஹஜ் தத்வதிஷ்யாமி லங்கா ராவண பாலிதாம்— "இராகவன் விடுத்த பாணமானது வாயுவைப்போல் எவ்வளவு பலமாக விரைந்து செல்லுமோ அவ்விதமே இராவணன் பரிபாலிக்கும் இலங்கையை நோக்கி நான் விரைந்து போவேன்" என்று ஸ்ரீராமாயணம். (ஸு. 1-43)

மூன்பு மஹேந்திரன் அபஹரித்துப் போன அச்வ மேதக்குதிரையைத் தேடிப் பிடிக்கக் கருதி, தேவேந்திரனுடைய ஒப்புயர்வற்ற என் முன்னோர்களான ஸகரபுத்திரர்களால் இப்பூதலம் தோண்டப்பட்டவே ஸாகரம்[1] தன் உருவத்தில் அகாதமாய் அபிவ்ருத்தியாயிற்று; ஆகவே அக்கடலானது தன்னிடம் தம் சிறகுகளைக் காப்பாற்றிய வாறு அமிழ்ந்து மறைந்திருக்கும் மலைகளை[2] உனக்கு உபசாரம் செய்ய உத்தரவிடுமாயின், நீ களைத்திராவிடினும்

---

1. ஸகரன் என்னும் இக்ஷ்வாகு வம்சத்து அரசன் அச்வமேத யாகம் செய்ய, அதில் விடுத்த யாகக்குதிரையை இந்திரன் பிடித்துப் போய் பாதாளத்தில் கட்டிவிட்டதும், அதைத் தேடப்போன ஸகர புத்திரர்கள் பூமியைப் பெரிதும் தோண்டிக்கொண்டு பாதாளம் போகையில் அவர்களால் ஸமுத்திரங்கள் ஏற்பட்டதும் ஸ்ரீராமாயணத்தில் விவரிக்கப்பட்டுள்ள கதை. ஸகரபுத்திரர்கள் தோண்டியதால்தான் 'ஸாகரம்' என்கிற பெயர் கடலுக்கு உண்டாயிற்று.

2. வலஹம் கூதபாதிம தாத வவர்தாः வகூஷி ணோऽலவாந। தெ ஹரி ஜகூஹுனிர்மாः ஸவர்ா முராபாநிஷு விஹிநாः। **** ததாः கூராஜுः ஸஹஸ்ராக்ஷः வவர்தா நாம ஸுதகூராः। வகூஷாஂஸி விஹ்ய வஜ்ரணேத தத தத ஸஹஸ்ரஸுः—"முன்பு கிருதயுகத்தில் பர்வதங்கள் சிறகுகளைப் பெற்று வெகு வேகமாகப் பறந்து சென்று உலகத்திற்குத் தீங்கிழைக்கவே, இந்திரன் சினங்கொண்டு, கண்ட விடங்களிலெல்லாம் அப்பர்வதங்களைச் சிறகறுத்து வீழ்த்தினன்" என்று இராமாயணம். (ஸு. 1-126,128). தன் முன்னோர்களான ஸகரபுத்திரர்களால் தோண்டி விருத்தி செய்யப்பட்டதால் ஸமுத்திரமானது இராமனுக்கு பந்துவாக அல்லது ஆப்த ஸ்நேஹிதனைக் கருதப்படி இதம் ராகவவஸ்ய கூமிஜாபிதாரூயிः வாரிவயிர்தः। ஸகூவாம ராகவஹிதே யூதூம வர்தாவயதி ஸாமரः—

என் உறவினனை[1] அச்சாகரத்தின் நட்பு மிகுந்த அந் நல்லுபசரிப்பைச் சிறிதும் புறக்கணிக்காதே. 56

அம்மலைகளில் எங்கேனும் மலர்ந்த பொற்சூழலை யுள்ளப் பெற்றதோர் நற்குளத்தில் உட்கார்ந்திருந்து நீ அவற்றிலிருந்து மிகச்சாரியும் மதுவை யருந்தி,[2] மார்க்க சிரமம் தீர்ந்தவனுய், மிச்சமுள்ள கடல் வழியையும் கடக்கத் தொடங்கினதும், வேகமாகத் தண்ணீர் மோதுவதால் வழுக்கடைந்து வளைப்பு வாய்ந்த கடலோரக் கற்பாறைகளையுடைய ஸுவேல மலையை[3] எதிரிற் காண்பாய். 57

அப்பர்வதத்திற்கு அருகில் கடல்நீரில் அச்சைலத்தின் சிறகுகளைச் சிதைத்ததனிகையிற் பெருகிய உதிரத்

"ராகவனுடைய குலத்திற் பிறந்தவர்களால் முன்பு ஸமுத்திரம் விருத்தி செய்யப்பட்டது; ஆகவே அச்சாகரம் இராகவனுடைய நன்மைக்காக முயன்ற உனக்கு உபசாரம் செய்ய முன் வந்திருக்கிறது" என்கிற இராமாயண விஷயம் (ஸு. 1-116) இங்கு ஹம்ஸத்திற்கும் உசிதமென்று எடுத்துக் குறிக்கப்படுவதாய் அறிக.

1. தன் குலத்து முன்னோரான ஸகரபுத்திரர்களால் உண்டானதாலையால் ஸாகரம் தனக்கு பந்து வென்று இராமனுல் கூறப்படுகிறது.

2. "தீ மானஸப்பிரயங்கையின் பொற்பங்கயங்களைப் பிறப்பிக்குந் தன்மையதான தண்ணீரைப் பருகியும்"—திஹோ ஹொஜ்ஜ்ரவி வலிலம் ஹ நவலவ்ர ஹஹ நः என்கிற (மேக. 1-62) வர்ணனையை அனுஸரித்தது இவ்விஷயம்.

3. "நீரலைகளின் திரள்கள் வேகமாய் மேலெழுந்து மோதுவதால் அலம்பி வழுவழுப்பாகச் செய்யப்பட்ட விசாலமான கடலோரக் கற்பாறைகளை அடைந்து"—கயி யள தொவெ தொயா தொவுளவிவெः வஸலவொ தீயி திதः। விவொசாவஸாஹ) விவூயரo—என்கிற இராமாயண வர்ணனையை (யு. 4-100) அனுஸரித்தது இவ்விஷயம்.

திரள்போல் தோன்றும் பவளக்கொடிகள், நிலத்தில் நிலை
த்திருக்கும் அபூர்வமான மற்றோர் மாலைநேரச்சூர்ய
வானம் போல் உண்மையிற் புலப்படும்; நீரில் தோன்றும்
தினது நிழலை அச்சந்தியாகாலத்துச் சந்திரன் போலவும்,
அலைகளால் அடித்து ஒதுக்கப் பெற்ற நல்முத்துக்களை
அம்மாலை நேரத்துத் தாரகைகளைப் போலவும் தோற்ற,
அவற்றால் அப்பவளங்கள் பல நிறங்களின் கலப்புடன்
கண்ணைக் கவருமாறு விளங்கும்.[1] 58

கடலிலிருந்தெழும் அலைகளின் விசையால் வீசிக்
கொண்டுவரப்பட்டும், முத்துத்திரள்களுடையவும் பிறி
துள்ள இரத்தினங்களுடையவும் நிறங்களால் பல வர்ணங்
கொண்டு புள்ள பவளங்களின் சேர்க்கையால் அக்குன்றத்
தையடுத்த கானகம் மிகத் தளிர்த்துச் செழித்திருப்ப
தாகத் தோற்றும்; மேலும் அரக்கனிடம் அஞ்சிய அம
ரர்களால் தாமாகவே பெயர்த்துவந்து ஆங்கு நடப்பெற்ற
கற்பக மரங்களின் மட்டில்லா மகரந்தப்பெருக்
கினுடைய மணத்தினால் அம்மலை மிகவும் மணம் பெற்று
விளங்கும். 59

பிறகு கடலின் இடையில், அம்மாமலையின் மீது
மேலுறைமான மாடமாளிகைகளுடன் வெண்மையாக
விளங்கும் இலங்காநகரம், ஓர் ஆற்றின் இடையில் மறைத்
தான மணற்குன்றில் அமர்ந்துள்ள நிர்மலக்காந்திபொருந்

---

1. "அப்பவளங்கள் அலைகளுக்கிடையில் அகப்பட்டு அலை
வதால் வளைந்து வளைந்து அலை மிகவும் ஒழுங்கினமடைந்த
காந்தி பொருந்தியிருக்க, நகூத்திரங்களுக்கொப்பான நல்முத்துக்
களுடன் சலந்து, அவனியில் அபூர்வமான மற்றோர் அந்திநேரச்
செவ்வானத்தை யுண்டுபண்ணுபவைபோல் புலப்படுவதினை
ணம்" என்றவாறு வேறு வகையிலும் இப்பகுதியும் மொழி
பெயர்க்கப் படலாம்.

திய நின் மனைவியான அன்னப்பேடுதான் உனக்குத் திதன்படும்; செவிக்கினிய தானிகளுடன் கூடிய அந்நகர மாகும் அன்னப்பேடு, காற்றினால் பறந்தாடும் பதாகைக ளென்னும் நிபதத்தினால் தன் சிறகுகளை வீசியவாறு, அவ்விடமேகும் உன்றனை இனிது கூவி யழைத்து எதிர் கொண்டு மேலே பறந்து வர முயல்வது போலத் தோற்றும்.[1] 60

---

1. கூடோகு ஸுதாகீர்ணோ வதாகாயுஜு ரவி நீடி। ஸிஸிஜுயி-ர் ஷ்டி தாம ஜுஷ்டாம வாஞ்சுவிரஹ-ர் வமிநः ஸுசிஹः। ஷுவதி நாதிவாகாமி ஊஷு-ர் ஹநுமாரு வாசீ—"பர்வதசிகரத்தில் வெண்மையான மாளிகைகளோடும், அழகிய சொடிகளோடும் ஆகாயத்திற் பறக்க முயல்வதுபோலத்தோற்றும் இலங்கையை ஹனுமான் கண்டார்" என்று இராமாயணம். (ஸு. 2-17,20.)

இரண்டாம் ஆச்வாஸம்

அந்த இலங்காநகரத்தில் இராவணன் அபஹரித்து வந்துள்ள அரம்பையர்கள் தம் குணங்களினத்தாலும் உன்றனக்கு ஒத்திருப்பதைக் காண்பாய்; எங்ஙனமெனில், அவர்கள் நடை ஒய்யாரமானது; அவர் ஒலித்துக் குலுங் குமாறு ஆபரணம் பூண்டவர்; மன்மத பாணங்களைப்போல் மயங்கச்செய்யும் கண்களைப் பெற்றவர்; வெண்மையாக வனப்பு வாய்ந்த அங்கங்களை யுடையவர்; இனிதாகப் பேசும் இயல்பினர்; மநோஹர ரூபமமைந்தவர்; நீயும் மநோஹர ஒய்யாரமாய் உலாவுகின்றனை; இனிய குரலோசை யைப் பெற்றிருக்கின்றனை; அம்பு போன்று கூர்த்தியான நேத்திரங்களோடும், வெண்ணிறமேனியோடும் கூடியிருக் கின்றனை; அழகான ஆர்ப்பரிப்பையும், மநோஹரமான மானஸப்பொய்கையில் இருந்து வாழக்கூடிய தன்மை யையும் பெற்றிருக்கின்றனை; ஆகவே அவர்கள் உன்னைக் கண்ணெதிரில் கண்டதும் களிப்புறச் செய்வர்[1]. 1

அவ்விடத்தில், கடுஞ்சாபங்களால் தனக்குக் கேடு நேரிடுமென்று அஞ்சிய அரக்கனை[2] தூர விலக்கப்பட்

---

1. இந்த வர்ணனை விஷ்ணுதர்மம் மநிதவநிதாः விலநரவாபம் மநிதராः என்கிற மேசஸந்தேச பத்தியத்தை (ஆ. 2–1) முற்றிலும் அனுஸரித்தது.

2. யஷ்டாதா யஷிக்தா வாஹம் கூபயா வாவாதிநா வநிந। தஷ்டாசு தவ வயாயிம் வெவ வஜ்ரதிதிக்ஷவ்ரவம் வோநः— "பாபியான நீ என்னை பலாத்காரமாகப் புணர்ந்ததால் உன்னை வதம் செய்யுங் கருவியாக

நள்ள லோகபாலர்களின் அந்தப் புராதர்கள் அக்னியை யும் எரித்திடும் தன்மை பொருந்தியவராய்,[1] நின் காதலி யின் நிறம்போல் நடக்கையில் நிர்மலமாயிருந்து கொண்டு, மைதிலியினுடைய கற்பின் மேன்மையாகும் தேஜஸ்ஸை தம்மைக் காக்குமென நோக்கியவாறு காவலிற் கட்டுண்டு இருந்து வருகின்றனர். 2

திக்பாலகர்களிடம் புகழ்ந்து பெயர் பெற்றுள்ள இராவணரால் இரக்ஷிக்கப்படுவதும், இரத்தினத்திரள்

கான் மீண்டும் பிறப்பேன்" என்று வேதவதி என்கிற தாபஸி இராவணனைச்சபிக்கிறாள். இராமாயணம். (உத்தர. 17-32) மேலும் யதோ ஹ்ருஷீகேஷ ஸ்தோ தர்ம ஸ்ததோ ஜய: ததோ ராமோ தர்மஜ்ஞ ஸத்யஸ்தேன பராக்ரம: என்பதாலும்—"எங்கு தர்மமோ அங்கு ஸ்ரீகிருஷ்ணன் இருப்பான். எங்கு ஸ்ரீகிருஷ்ணன் இருப்பானோ அங்கு தர்மம் இருக்கும். எங்கு தர்மமோ அங்கு ராமன் இருப்பான். எங்கு ராமனோ அங்கு ஸத்யம் இருக்கும்" என்று இராமாயணம்.

1. தவஸா யஜ்ஞவாகேந தானேனாபி ச பூயஸா
ஸ்தாபிதா: பூர்வதேவைர்யே தே தே லோகபாலகா:—"தனது தவத்தினாலும், ஸத்யமுரைக்குந் தன்மையினாலும், பர்த்தாவைத் தவிர்த்து வேறெவரையும் மனத் திலும் நினையாத கற்பின் மஹிமையினாலும் ஸீதை அக்னியை எரித்திடலாமேயன்றி அவளை அக்னி சுடுவதற்கியலாது" என்று இராமாயண வசனம்.

2. ஸுஸந்தோஷாத்ர ராஜேந்த்ர தவைஷாபி தபோபல
நாசகோ ந கதாசித்தே ஸ்தாபிதஸ்ய யதோ மயா
ஸ்ரீதேஜஸா—"ஸ்ரீராமனுடைய சட்டஞ்ஞையைப் பரிபாலிக்கக் கருதியிருப்பதாலும் தனது பாதிவ்ரத்ய தேஜஸ்வினால் உன்னை பஸ்மமாக்காமலிருக்கிறேன்" என்று இராமாயணம். (ஸு. 22-20)

ரம்மிய தரிகூடபர்வதத்தின்[1] உயரிய சிகரத்தில் அமைக்கப்பட்டுள்ளதுமான அப்பட்டணமானது தன் சோபைச் செழிப்பின் மேன்மையினால் மேரு பர்வதத்தின் மீதுள்ள அமராவதியைத் தனக்கு எதிரில் வந்து நிற்குமாறு தன் கொடிச்சீலையுருவான கைமுனைகளை வீசி வலுச்சண்டைக்கு வருந்தியழைப்பது போலத் தோற்றும். 3

அந்தகரத்தில் உனது உல்லாஸ லீலையாட்டுக்கு அனுகூலமாய் மேகங்கள் நீங்கி மேன்மையாயுள்ள இச்சர்த்ருது வென்னும் பருவத்தில்,[2] இரவாகும் மங்கையின் இறுமாப்புடன் கூடிய வெளுப்பான நகைப்பினத்தகும் மதியின் கதிரொளிகளைக் கண்டு[3] மதிமயங்கிய விண்ணவர்மங்கையருக்கு விரஹவேதனையாலுண்டாகும்[4] கண்ணீரைக் கரை புரளச் செய்யுமாறு சந்திரகாந்தமணித்தடங்களிலிருந்து கசிந்தருகும் நீர்த்துளிகள்[5] நிரம்பவும் வழிந்தோடும்.[6] 4

---

1. ஸுவேல பர்வதத்தின் என்றும் வேறொரு பாடமுண்டு.

2. மாரிகாலத்துக்குப் பின் வரும் மேகங்கள் ஒழிந்த சரத்காலம் என்னும் பருவம் அன்னப்பறவைகளுக்கு அனுகூலமாக மன்மகிழ்ப்பு அளிக்கக் கூடியதாயிருக்குமென்று வர்ணிப்பது வழக்கம்.

3. இரவை ஒரு ஸ்த்ரீயாகவும், சந்திரனை அதற்கு நாயகனாகவும் கூறுவது முறை.

4. விரஹவேதனை–பிரிவாற்றுமையாலான மனோநோய்.

5. சந்திரகாந்தமணி - ஒருவகை மிகக்குளிர்ச்சி தரும் சிலை; இது சந்திரன் உதித்து அதன் கிரணங்கள் மேலே படுவதால் நீர்க்கசிவைப் பெறுமென்று கவிகள் கூறுவர்.

6. மாரிகாலத்து மேகங்கள் நீங்கியதால் தன் நாயகனை சந்திரனுடன் கூடியிருப்பதற்கு இரவாகும் ஸ்த்ரீக்கு அனுகூலம் ஏற்பட்டிருக்க, அப்பெருமையும் களிப்பும் இலங்கையில் அகப்

மைதிலியின் மனத்துயராகும் அனலின் சுடரொளிப் பிரபாவத்தினால் அவ்வாறு அகண்டமாக வளர்ந்து[1] ஆஞ்ஜனேய ஸ்நேஹமாகத்தை அபூர்வமாய் அடைந்த அக்னியினால்[2] அழித்துச் சாம்பலாக்கப்பெற்ற[3] அந்த இலங்கா நகரத்தை விச்வகர்மாமுதலிய விண்ணுலகச் சிற்பிகள் உள்ளத்திற் பயங்கொண்டு உற்றுப் பார்த்து, முந்திய அமைப்பையும் அவமதிப்பதாகத் தோன்றுமாறு நிச்சயமாய் மீண்டும் நன்கு நிர்மித்திருப்பர். 5

அந்நகரத்திற்கிடையில் அரக்கர் கோமானின் ஆகாயமளாவிய அற்புத அரண்மனையைக் காண்பாய்; வாலுலகில்

பட்டுத் தவிக்கும் தேவமாதருக்குக் கிடைக்க வகையில்லாமையால் அக்காலத்து இரவாகும் மாதுக்கு இறுமாப்பு ஏற்பட்டிருப்பதுபோலவும், அதற்கு அறிகுறியாகச் சந்திரிகையை இரவின் சிரிப்பு போல் இருப்பதாகவும் வர்ணிக்கிறார்:

1. ..... யः பௌராகவஹ்ருந் ஜநகாத்மஜாயாः
க்ருத்ரிம திதிக்ஷாயா உத்தாஹ முஹூர்தம் — "ஜானகியின் மனத்துயராகும் அக்னியை எடுத்து, அதனைமேலிய ஆஞ்ஜனேயர் இலங்கையை எரித்தார்போலும்" என்னும் வசனம் இங்கு கவனிக்கத்தகுந்தது.

2. ஸ்நேஹமும் என்பதற்கு அன்பு எண்ணெய் என்று இருபொருளுண்டு. [அக்னியானது ஸீதையின் கற்புப் பெருமையினால் ஆஞ்ஜனேயரைச் சுடாது, அவரிடம் குளிர்ச்சியாயிருந்து அன்பு காட்டியது என்பது ஸாதாரண அர்த்தம். அக்னியானது 'எண்ணெயினால் விருத்தியாவது இயல்பு; இங்கு ஆஞ்ஜனேயரிடமுள்ள ஸ்நேஹமும் என்கிற எண்ணெய் அவ்வக்கினியை வளரச் செய்தது என்றும் பொருள்.]

3. "ஆஞ்ஜனேயரிடம் ஸ்நேஹமுள்ளதும். இலங்கா நகரத்தைப் பொசுக்குமாறு விருத்தியாகக் கூடியதும், மைதிலியின் சோகாக்னியினுடைய சுடரொளியெனத் தகுந்ததுமான அந்த அக்னியினால் பஸ்மமாக்கப் பெற்ற" என்றும் பொருள் கூறலாம்.

விண்ணவர் தம்பதிகளை ஏற்றிச் செல்வதற்கான விமானங்கள் ஆங்கு எப்பொழுதும் காத்திருக்கும்;[1] அம்மாளிகையே தேவமாதர்களுக்குச் சிறைச்சாலையாயிருப்பது; அதைக் காணும் போது நின் மனப்போக்கு இன்பதுன்பங்களை ஒருங்கே கலந்து அனுபவிக்கப் போகின்றது. 6

அவ்வரண்மனைக்கு அருகிலுள்ள நந்தவனத்தில் எல்லாப் பருவங்களின் அருங் குணங்களையும் எப்பொழுதும் பெற்றுச் செழித்து விளங்கும் விருக்ஷங்களின் சோலையை[2] நாடிச் செல்வாயாக; அச்சோலையில் வாயுவும் அரக்கன் அற்பச்சினத்திற்கும் அஞ்சியொடுங்கியே அசையும்; கதிரவனும் சந்திரனைவனைச் சந்தேகித்து மாறு மழுங்கிக்காணப்படுவான்; ஸீதையின் சோகாக்னிக்கு நிகராகச் சென்னிறமாயுள்ள அசோகமரங்களால் அச்சோலை பிரகாசமாய் விளங்கும்; ஆஞ்சனேயர் அங்கு யிங்கும் தாவியோடியதால் அதற்கு மூன் என்றுமில்லாத சோகமாய் அலைத்தழிக்கப்பட்டதும் அச்சோலையேயாம். 7

---

1. "வானுலகில் விண்ணவர்தம்பதியை ஏற்றிச் செல்வதற்காக நியமிக்க பெற்றவர் தம் விமானங்களை வைத்துக்கொண்டு ஆங்கு காத்திருப்பர்" என்றுகிலும், "அரக்கர் தம்பதியை ஏற்றிச் செல்வதற்காக விண்ணகரது விமானங்கள் ஆகாயத்தில் அங்கு யிங்கும் வட்டமிட்டவாறு காத்திருக்கும்" என்றுகிலுங் கூட மூல வாக்கியத்திற்குப் பொருள் கூறலாம்.

2. ஸர்வ-ர்து-ர்கு-ஸுமை வ்ர-ர்மிகை: ஸம வஹி ஸு வாஹுமைவ: வாஹி தா நாமிவாகா நாமறி யா ஸமொராஹய வ்ரஹாழ்: —"எல்லாப் பருவங்களிலும் தோன்றக்கூடிய மலர்களோடும் கனிகளோடும் விளங்கும் விருக்ஷங்களையும், அசோக மரங்களையும் பெற்று, கதிரவன் உதிக்கும் விடியற்காலை அழகைப்பெற்றிருக்கும் அச்சோலை" என்று இராமாயணம். (ஸு. 15-5)

அருமைப் பறவையே, அவ்வசோகவனத்தில் ஆனந்த பரவசமாயுள்ள வேறு பறவைகளோடு ஆகாயத்தில் வட்டமிட்டு உயரப் பறப்பாயாகில், ஆங்கு ஜானகியின் ஆபத்பந்துவாயுள்ளதும், அடர்த்தியான கிளைகளைப் பெற்றதும்[1], கிளையொன்றில் வைத்துள்ள அவளது ஆபரணங்களுடன் கூடியதுமான[2] சிறப்பு வாய்ந்த சிம்சுபா மரமொன்றைக் காண்பாய். 8

அன்பனே, அம்மரத்தின் அடிநிழலில், யாகபூமியை உழுதுச் சீர்திருத்தும்போது அங்கிருந்து தோன்றியதும், எவ்விடத்தில் இருப்பினும் தன் மஹிமையினால் திராஸமற்ற திருப்பதும்,[3] அக்காலத்தில் மிக்க ஆவலுடன் வீர்ய

---

1. ஸுஸம்ருத்தகாமரூபம் ஸுஹிரண்யகரணகூரம் வஸுவாடி. தாசாரஸுஹ்ருத் ஶஹாவாஹ ஸ்ரீமஸுவாம் வைணவ்ஸம்வ்ருதாம் ॥— "இளந்தளிர்களையும் மலர்களையும் பெற்று அழகாக விளங்குவதும் இலைகள் அடர்ந்ததுமான சிம்சுபா மரத்தில் ஹனுமான் ஏறினார்" என்று இராமா. (ஸு. 14–39.)

2. விவிதஹ்ருத்யா யாநீ வாபூஷணா தஶாஸ்ய ஸாமிஸ்ய ஹ்ருவண்ணபஶ்யத் தாநுதாஹரணஜாயாநி ஸர்வாண்யஸாஹீந்ய ஸுகூடயத்॥— "முன்பு இராமன் ஸீதையின் தேஹத்தில் எவ்வெவ் வாபரணங்களைப்பற்றி விவரித்துக் கூறினாரோ அவற்றையெல் லாம் ஆங்கு ஒரு கிளையில் வைத்திருக்கப் பார்த்தார்." இராமா. (ஸு. 15–39.)

3. திராஸமற்றது - பயமொழிந்தது; திராஸமென்னும் தோஷம் (இரத்தின தோஷம்) நீங்கியது. [அரக்கன் வசப்பட்டு அதிபயங்கரமான இடத்தில் அகப்பட்டுக்கொண்டு வருந்த நேரிட்டிருக்கையிலும் தைர்யங்குன்றாது இராமனை எதிர்பார்த்திருக்கும் அஞ்சா நெஞ்சம் படைத்தவள் ஸீதை எனக் கருத்து.]

மாகும் விலையைக்கொண்டு என்னல் விரும்பியடையப் பெற்றதும், சூர்யகுலமேஜீவியாய் விளங்குவதுமான அபூர்வமானதோர் திவ்யரத்தினத்தைக்[1] காணைக்கொடுத்து வைப்பாய். 9

அவ்வினம்பெண்மணி நேர்த்தியான மத்ஸ்யம் போன்ற நேத்திரங்களையும், வளைந்த புருவங்களையும், புனைகுழலையும், மெலிந்து மநோஹரமான மேனியையும், உயர்ந்தெழுந்த ஸ்தனபாரத்தினல் ஒருவாறு வணங்கிய நேஹத்தையும், காய்ச்சிய செம்பொன் போன்ற காந்தியையும், உண்ணப்போல் உல்லாஸமான நடையையும், வேதிபோல் வனப்பான இடையையும், எல்லாப்படியாலும் ஏழில் மிகுந்த வடிவத்தையும் அடையப் பெற்றவள்; சுருங்கக்கூறின் ச்ருங்கார மென்னும் நிதியில் அமர்ந்திருக்கும் அரும் பெரும் சீர்மைக்கே தைவம்போல் விளங்குபவள்; அவளே என் அருமைக் கண்ணுவள். 10

---

1. இந்த ஸீதை யென்பவளை உண்மையில் அபூர்வமான ரத்தினந்தான் என்பது 'திநகரகுலத்யோதகம்' என்னும் சிலேஷையினல் ஸ்திரப்படுத்தப்படுகிறது. வேறு எவ்வொளியையும் மழுங்கச் செய்வது சூரியன்; இந்த ஸீதையென்னும் ரத்தினமோ ஒரு சூரியனல்ல, ஆனல் பல சூரியன்களுடைய (திநகர குலஸ்ய - அநேகம் சூரியன்களுடைய) ஜோதிக்கு எதிரில் மிகப் பிரகாசிப்பது என்றும், சூரிய வம்சத்தைப் பிரகாசிக்கச் செய்பவள் என்பதும் இதன் சிலேஷையாலான உட்கருத்துகள். மேலும் பரிசுத்தமான யாகபூமியிலிருந்து உண்டானதாலும், விலை மதிப்புக்கு அடங்காத வீர்யமென்னும் புஜபலத்தைக்கொண்டு ஜனகர் ஸதஸ்ஸில் அடையப்பட்டதாலும் இது முற்றிலும் அபூர்வமான திவ்ய ரத்தினமாம். 'கமிஹ ஜெ பா 3யா வீதா வீர' ஸாஹா 3ஹா தூ நி' இராமாயணம். (பால. 68-11.)

2. 'ஸாமே திவ்டம்' என்னும் பாடத்தில் 'அவளை எனது உருவெடுத்த பாக்கியமாவள்' எனப் பொருள் கூறவேண்டும்.

அவளை நீ காண நேரிடும்போது அவள் சோர்ந்து மூர்ச்சித்தவளாகவாகிலும், என்னிடம் வந்து சேருவதற் காகத் தாதுவிடக் கருதி பறவைகளுக்குச் செய்தியைச் செவியுறச் செய்தவாறுகிலும், நற்செய்தியைக் கேட்குந் தருணம் மிக்க நெருங்கியிருப்பதாகக் குறிப்பிடும் சகுனங் களால்[1] நேத்திரங்களைக் கண்ணீர் மறைக்க, நாமிருக்கும் இத்திசையையே நோக்கியவாறுயினும் இருக்கப்போ கிறாள். 11

அல்லது, அவள் அருகில் கழற்றி வைத்துள்ள அணி கலங்களை நோக்கி மதிமயக்கங்கொண்டு, 'இரகு குலதிலக னுடைய உடற்பரிசம் உங்களுக்கு நினைவில் இருக்கின்ற தன்றோ' என்று தானே வினவிப் பேசியவாறுகிலும், நெடுநாட்களா யிழந்துள்ள ஒரே சயனத்தில் நிகழ்ந்த அநேகவகைக் கிரீடாவிலாஸங்களை நினைந்து வருந்திய வண்ணமாயினும்[2] இருக்கக் காண்பாய். உண்மையில் விதி

---

1. நிஶிதஸுமதஹதத்வா ஸ்ரோதஸ்ஸ்வா ஶுஷ்க தரயுஷு ஶுஷ்யதி ஸ்வ ஸ்ரஸுகஷ்ணஃ பஶ்சாத்ஸ்ரீவா யதிஷ்யதி॥—"இவளது தாமரையிதழ்போன்று அகன்று அழகாயுள்ள நேத்திரம் தூடிப்பதானது மிகப் பெரிய ஸந்தோஷச் செய்தியைக் கடுகவே கேட்கப் போவதற்கு அறிகுறியான சகுனமாம்" என்று இராமாயணம். (ஸு. 27–59.)

2. இவ்விஷயம் பின்வரும் அழகிய பத்தியத்திலுள்ள அகில அர்த்த புஷ்டியும் அடங்கியது.—வ்ருஷாஸ்ரூநவ ஸந்தாதிதஸ்ஸவ்ருத்தநிவஶ்யாதஸ்ஸா: ப்ராய ஸ்தீவ்ர ப்ரஸ்ஸுராயாஸ்ப ஸ்ரயாவாந் ப்ரஸாதஸ்ஸ்ஸ்ஸ்ஸ: ப்ராதஸ்ஸ்ரஸ்ஸ்ரா கூணித மெரவநா: ப்ரதிஸ்ஸ்ஸ்ஸ: கூடாஶோகஸ்ரீ தாரிணோ: ஸீதாராவவயோ: ஸஹ்ரவிஸ்ஸ்ஸ: ஸ்ரூஸ்ரூஷ்ரு ஸீயா ஸஸ்ஸ:॥

வசத்தாலல்லமேவா அவளுக்கு அவ்வாறு காலங்கழிக்கும் கஷ்டநிலைமை நேர்ந்திருக்கின்றது[1]? 12

அரக்கனது வீட்டில் அடைபட்டு மனம் வருந்தும் மைதிலியான வள் சண்டாளரது சேரியிற் பிரகாசிக்கும் வெண்ணிலவுபோலவும், எட்டிமரக்காட்டில் எடுத்துவந்து நாட்டப்பட்ட கற்பகக் கொடிபோலவும், மூர்க்கருக்கு அருகில் மொழியப்படும் மஹாகவியின் அழகிய நன் மொழிபோலவும் இருப்பளெனக் கருதுகிறேன். 13

மேலும் மழை பெய்து அலைத்து அலங்கோலமாக்கிய அம்புயக்குளம்போலவும்,[2] விபரீதப்பொருள் கொள் ளும் வாக்குபோலவும், சேற்றில் அகப்பட்டுழலும் செந் தாமரைக்கொடிபோலவும், ஆண்யானையை விட்டகன்ற பிணைப்பேடுபோலவும், மேகத்திலை மறைக்கப்பெற்ற சந்திரகலைபோலவும்,[3] இடையூறுகளால் சேடறுது தடுக்

---

1 ஆர்ய முராரிநீதவ்ய லக்ஷ்மணவ்ய முராரி வீர்யா யஜி விதாவி ஊஃவாத-ர கூரொ ஹி ஊரதிகூரஃ—"குருமார்களிடமிருந்து உயர்ந்த சிக்ஷைகளைப் பெற்றுள்ள லக்ஷ்மணருடைய மூத்த ஸஹோதரனது மனதைக் கிளைந்த மனவியான ஸீதையும் துயரங்களால் வருந்த நேரிட்டால், காலக்கொடுமை கடக்க வியலாததாம்" என்று இராமா. (ஸு. 16-3)

2. ஹிஃஹத நலி நீவ நஷ்டஸாஹா வ்யவந ஊரு ஊரயாதிவீவ்யுஆநா — "மேன்மேலும் துயரங்களால் வருந்தும் ஸீதை புனி வீழ்ந்து பாங்கிழந்த பங்கயப் பொய்கை போல் காணப்படுகிறுள்." இராமா. (ஸு. 16-30).

3. ராகுகஸாயிவஸம்ருஜாம் ஜநாஃ ஹிஸ்து விநா கூ தாரி। வியுயா ஸீஹஸம்ருஜாம் ஜநாம் ஜ ஜயஜீவி। வந்ரிவாம் வியொஹாகே ஸாஸஜா

கப்பட்ட மனக்கோரிக்கை போலவும்[1], மாமிபரும் புலிகளுக்கு இடையில் அகப்பட்ட மான்பேடுபோலவும், நிலத்தினில் அவிழ்த்தெறிந்த ஞாண்கயிறு போலவும் அவள் இருந்துவருவள். 14

அவள் முன்பு மன்மதபாணங்களிடமிருந்து பயந்து என்னைத் தழுவியவண்ணம் தன்னைக் காத்துக்கொள்ள முயல்வது வழக்கம்; அதை மனத்திலெண்ணி, இப்பொழுது மேனியானது முன்னிலும் மிக்க மெலிந்து மிருதுவாகப்போயிருப்பதால் அணிகளை அணிவதிலும் ஆயாஸங் கொள்ளுபவையும், சந்தனப்பூச்சுக்களைத் தரிப்பதிலும் சோர்வடையக் கூடியனவும், தன் நிலைமையைப்பற்றி மனத்தில் எண்ணுவதையும் தாங்க வியலாதனவுமான

மிலஶ்ரீவாவூதாழ॥—"இராக்ஷஸ மன்னனால் சிறையிடப்பட்டும், பந்துக்களை விட்டுப் பிரிந்துமுள்ள ஸீதையை யானைக் கூட்டத்தை விட்டு விலக்கப்பட்டு சிங்கங்களுக்கிடையில் அகப்பட்டுக்கொண்ட பெண் யானை போலவும், மேகங்களால் மறைக்கப்பட்ட சந்திரகலை போலவும் இருக்கக் கண்டார் ஹனுமான்." இராமா. (ஸ. 17-21,22.)

1. விஹதாதிவ ஸ்ருஜ்ஜாஶாஸாம் வ்யதிஹதாதிவ।
ராக்ஷஸீ ஹிவி-ர் ரமவைா ஹிः கூ-ரா ஹிர ஹிஸம் வூதாழ்।
ஶாஂஸஶிலாணி தஸக்ஷா ஹிः வ்யாவீர்ஹிஹர-ர்ரிணீவ।
ஹ-ரூஶள வாமினைவி-ர் நிஷ்ஷ்யதாம் வதிதாம் ஜ்யாவிவர
ப்ரூயாஸு॥—"அலக்ஷியமாய் அழித்துப் போட்ட சிரத்தையைப் போலவும், இடையூறுகளால் அடிபட்டுப்போன கோரிக்கையைப் போலவும், இரத்த மருந்தி இறைச்சியுண்ணும் புலிகளுக்கிடையில் அகப்பட்ட மான் பேடு போலவும், அம்புகளால் அறுபட்டு அவனிதலத்தில் வீழ்ந்து கிடக்கும் நாண் கயிற்றைப் போலவும் அவள் இராக்ஷஸிகளுக்கிடையில் அகப்பட்டுத் தவிக்கின்றாள்" இராமா. (ஸ. 15)

தனது அங்கங்களால் தன் அன்னையான அவனியை ஆலிங்கனம் செய்தவாறுகிலும்[1] அவள் இருக்கக் காண்பாய். 15

மேலும் எனது அங்குளீயகத்தை அடிக்கடியும் கமல மலர் போன்ற தன் கரத்தினில் வைத்துக்கொண்டு மேனி யெங்கும் மயிர்ச்சிலிர்க்கையடைவாள்; அதைச் சூடாமணி நீக்கிய சிரத்தினில் அமர்த்தியும் இன்பமனுபவிப்பாள்; மனதிற் பொங்கி யெழும் மஹத்தான விரஹதாபத்தினால் வாட்டங்கொண்ட மார்பின் ஒவ்வொரு பக்கதிலும் மாற்றி மாற்றி அதை எடுத்து அமர்த்தியுங் கொள்வாள். 16

எனது அன்னைக்குத் துல்லியமான[2] அநஸூயை என்னும் தாபஸி எமது நல்வினைப் பயனைத் தகுந்த தும் அவளுக்கு ஏற்றதுமான திவ்யமான சந்தனப்பூச்சை இவ்வளது மார்பில் நிலைத்திருக்குமாறு முன்பு பூசினளன் றே?[3] கலசங்கள் போன்ற அவளது மார்பில் நாற்புறமும்

---

1. கூஸம்வ்ருதாயாஸ்தாவதீநாம் யாணாம் ஸம்ஸ்ருத வ்ருதாயு: ஸ்தநாம் வ்யவதிதாம் ஸ்ரமேண ஸாவாதிவ வநஸ்ருதிம்:—"பூமியில் வெட்டி யெறிந்து விழுந்துள்ள மேன்மை யான மரக்கிளைபோல் வெறுந்தரையில் அவள் அமர்ந்திருக்கிறாள்" இராமா. (ஸு. 19–5.)

2. வையம் சாதிதவ தெதநவ—'ஓ புண்ணியசாலி யான் ராம, அவ்வநஸூயை உமக்கு மாதாவைப் போன்றவள்' என்று இராமனை நோக்கி அத்ரி முனிவர் கூறுகிறார். (அயோத். 117–11.)

3. யோ ஏதஸ்மிந் வீதே தவ மாதாணி ஸௌஹ யெந:। கந்ரவிவேஷஸம்ஸ்ருஷ்டம் நிதயெவ ஸவிஷ்ய தி:॥ தூராமெண ஸிவ்ய ஸ்ரீஷ்டாஜீ ஜநகாத்மஜே!—"ஜானகி, நான் அளிக்கும் இச்சந்தனம் தேவார்ஹமானது; உனது அழகுக்கு முற்றிலும் ஏற்றது; உனது அங்கங்களிற் பூசப்பட்ட பிறகு ஒரு நாளும் அங்கிருந்து விலகாது உனதிடம் அழகாக விளங்கும்" என்று அநஸூயை கூறுகிறாள். இராமா. (அயோத். 118–19.)

தாரை தாரையாகக் கடுந்துயரத்திலுல் சூடடைடந்து விழும் திரளான கண்ணீர்களால்[1] அச்சந்தனப்பூச்சும் அலம்பி விலக்கப்படுமாறு அவள் வாடிவருந்தி யிருப்பாள். 17

கை கொள்ளாத அவளது கூந்தலை முன்பு ஒருகால் நான் தாறுமாறுகச் சுற்றிக் கட்ட, அது கலைந்துவிழுந்து, அவளது மேனியின் பரிமளத்திற் பரிவுடன் ஆசைகொண் டது போல் நாற்புறமும் விரிந்து அலையும்; அவள் அத் தகைய கூந்தலை எடுத்துக் கட்டியவாறிருக்கலாம்; அல்லது காமதேவனைக் கருத்துடன் அர்ச்சிப்பதற்காக அரம்பையர்களால் அவனிதலத்தில் எறியப்பெற்று, கரி வண்டுகளால் குறுக்காப் பரவி மொய்க்கப்பட்ட கற்பக மரத்தின் பூங்கொலைபோலவும் தோற்றுவாள். 18

சுற்றிலும் ஓரக்கரைகளில் உன் மனைவியின் உருவங்க ளமையப் பெற்றதும்,[2] ருச்யமூகபர்வதத்திலிருந்து வானரர்களால் விரைவாக எடுத்துவரப்பட்டதுமான இதோ எதிரிலுள்ள அவளது மேலாடை போலவே,[3]

---

1. ஸா ஸ்நாவயதீ விவ்ருதௌ ஸ்தன நிந்த ஜ்ருஸ்ரு நிவேஃ—"கண்களிலிருந்து பெருகும் நீர்த்தாரைகளால் தனது விசாலமான மார்பை அவள் மிகவும் நனைத்துக் கொண் டிருந்தாள்" இராமா. (ஸு. 25-27)

2. உன் மனைவியின் உருவங்கள் என்றால் - ஆடையின் ஓரங்களில் வரிசையாகப் பெண் அன்னப்பறவையின் சித்திரம் அமைக்கப் பெற்றது என்று பொருள்.

3. இராவணன் விமானத்தில் சீதையை ஆகாயமார்க்கமாய் எடுத்துப் போகும்போது, அவள் தன் மேல்வஸ்திரத்தில் தன் ஆபரணங்களை முடிந்து ருச்யமூக பர்வதத்திலிருந்த வானரங்க ளிடம் போட்டதாகவும், அவ்வஸ்திரத்துடன் ஸுக்ரீவாதிகள் அவ்வாபரணங்களை இராமனிடம் பிறகு எடுத்து வந்து அளித்த

பால சூரியனது காந்திபோல் மனோஹரமாய் விளங்கக் கூடிய வஸ்திரத்தை அணிந்தவளாய்,[1] அவள் லக்ஷ்மியா காலச் சிவப்பு கலந்த மற்றொரு சந்திரகலை போலவும் தோற்றுவள்.[2] 19

அவள் சென்ற பாதையை எனக்குக் கூறிவிடக் கருதியது போல் அவளது பாதகமலத்திலிருந்து நிலத்தினில் கழுவி வீழ்ந்து, உன்னைப்போல் இனிது ஒலிக்குந் தன்மையதான[2] அவளது வலது காற்சிலம்பு இதோ என்

தாகவும் இராமாயண கதை.—வனவாஸாத் தத: ஸீதா விஸ்ருஷ்டா மஹாநாம ராக்ஷஸாதிபம் ராவணமுபாயயௌ। உத்தரீயம் ஹ்ரியமாணா தா ராக்ஷஸாநாம் ராஜாநமணாதி ஸா। ஊரும் வஸநாத் தஸ்யா: பபாத ஸஹஸா நத:—இராமா. (கிஷ். 6–14,15.)

1. சிரஸ் முதலியதை மூடுவதற்கான மேலாடையில் ஆபரணங்களை முடிந்து எறிந்து விட்டாள் என்றும், அதேவிதமான நிறம் முதலியதைப் பெற்ற மற்றொரு ஆடையுடன் அவள் இருந்து வருகிறாள் என்றும் கருத்து. ஸ்த்ரீகள் இரண்டு வஸ்திரங்களைத் தரிப்பது முற்காலத்திலும் இக்காலத்தில் வட தேசங்களிலும் வழக்கம். ஆகவே 'வீதிதமிநகந வஸம்வீதாம் க்ஷௌமே நாதிஸுவாஸஸா।— 'பொன்னிறமாயும் அழுக்கடைந்ததுமான ஒரே வஸ்திரத்தினுல் உடலை மறைத்துக்கொண்டிருக்கிறாள்' என்று ஸுந்தர காண்டத்தில் கூறப்படுகிறது.

2. உன்னைப்போல் ஒலிக்குந்தன்மையது - அன்னப் பறவையைப்போல் கலகலவென்று தண்டை சப்திக்குங் குணமுள்ளது. ஹாரனூபுரவாசாலம் ஹ்ருஷ்டம் விவ்ருத்ய ராத்ரௌ தத்ரைவ விஷ்டம் விஜ்ஞாநுஷ்ய லஜ்ஜாயம் வபாத யோ ராவணஸ்ய। "விமானத்தில் இராவணன் ஸீதையை அபஹரித்துப் போகும்போது அவளது ஒரு காலிலிருந்து தண்டைச்சிலம்பு கழுவி கீழே வீழ்ந்தது; இரத்தினங்களிழைக்கப்பெற்று மின்னல்போல் துலங்கிய அத்தண்டை விழும்போது வெகு மதுரமாகச் சப்தித்தது." இராமா. (ஆரண். 52–36.)

னிடம் உளது; எனது மடிமேல் வைத்த அவளுடைய தாமரைமலர்போன்ற தாளில் என் கரத்திலேயே அணிந் திடக்கூடிய தன் இடது கால் தண்டையை அங்கு மரக் கிளையில் வைத்து விட்டு, அதைக் கண்டு அவள் கடுந்துயர் அனுபவிக்கவும் காண்பாய். 20

அணிகளாகும் மலர்களை அகற்றி, வாடிய இளந்தளிர் களுக்கொப்பான அவயவங்களோடு! கூடியவளாகவும், மாசற்றுத் துலங்கும் மேனியிற் பிரதிபலிக்குங்கொடிகளால் திடமாகத் தழுவப்பட்டவளாகவும், மனக்கொதிப்பால் வெப்பங்கொண்ட மூச்சுக்காற்றின் பரிசத்திலல் சீரழி காந்தி மழுங்கவே ஒரு சிறிது உரு மாறுபாடடைந்த வளாகவுமுள்ள ஸீதை அரக்கன் வீட்டில் சிறையிடப்பட்ட நந்தனவனதேவதைக்கு ஏற்ற சீர்மையைப்[1] பெற்றவ ளாகத் தோற்றுவள். 21

---

1. நந்தனவன தேவதை போன்றவள் ஸீதை என்றால் விருக்ஷத்திற்குள்ள லக்ஷணங்கள் இவளிடம் இருக்கவேண்டு மல்லவா? இவளுடையமிருதுவான அவயவங்கள் யாவும் தளிர் போன்றிருக்கின்றன; ஆபரணங்கள் மலர்களுக்கு ஒப்பானவை; (இப்பொழுது ஆபரணங்கள் கழற்றப்பெற்றிருப்பதால் மலர்க ளுதிர்ந்த மரம் என்றும் கூறவேண்டும்.)பளபளவென்று இயற்கைப் பொலிவு இருப்பதால் அவ்வித தேஹத்தில் அசோகவனத்திலுள்ள கொடிகளின் பிரதிபிம்பங்கள் காணப்படுகின்றன; அவை ஒரு செழிப்பான அழகிய மரத்தில் அருகிலிருந்து கொடிகள் படர்ந்து ஏறி யிருப்பதுபோலத் தோற்றுகின்றனவாம். ஸ்த்ரீயுருவமர யிருப்பதால், மரங்களடர்ந்த நந்தனவனமே உருவெடுத்து அழகிய பெண்மணியாயிருக்க, அவளையும் இராவணன் மற்ற அழகிய ஸ்த்ரீகளைப் போலவே சிறைப்பிடித்து வைத்திருக்கிறானே என்று ஊஹிக்கலாம்போல் இருக்கும் என்பது கருத்து.

அவள் எல்லாப் புலன்களையும் வெளி விஷயங்களெதி லும் செல்லவிடாது அடக்கிப்போடவே மன்போக்கு மிகச்சாந்தி யடைய, காமதேவனின் கார்ய-குணதிகளை விளக்கும் சாஸ்திரத்தை அனுஸரித்து என் ஒருவனிடமே பிரணிதானம் என்னும் பக்திமுறையில் மதியைப் பதிய வைத்து, வேறெதிலும் செல்லாத வாஸனை யென்னும் முறபிறப்புகளின் ஸம்ஸ்காரம்மேன்மையுற்றதால் தியான வேலையில் ஆழ்ந்து லயித்தது போல் மிருதுவாக்கப்பெற்ற மன்த்திலுல் நிர்விக்லபஸ்மாதி யென்கிற ஸத்தான தத்து வத்தையே அவலம்பித்துள்ள யோகாப்யாஸத்தை நிகழ் த்துபவள் போலவும் இருக்கக்கூடும்.[1] 22

---

1. யோகாப்யாஸம் செய்பவர் தான் தியானம்செயயவேண்டிய ஈசவரன் அல்லது அவன்போன்ற வஸ்துவினிடமே அசையாது மனதைச் செலுத்தி, வேறெதிலும் அது செல்ல இடங்கொடாது, திடமாயிருந்து வருவதுபோலவே, ஸீதையும் இராமனைத் தவிர்த்து வேறெதிலும் தன் மனதைச் செல்லவிடாது திடசித்தத்துடன் இருக்கிறாள் என்பது முக்கியக் கருத்து. [குறிப்பிட்ட ஒரு வஸ்து வைத் தவிர்த்து மற்றெதிலும் செல்லாதபடி மனதை அடக்குதல் யோகம். அதுவே **ஸமாதி**. சித்தவ்ருத்தி என்னும் மனப்போக்கு பிரமாணம், விகல்பம், நித்திரை, ஸ்ம்ருதி, விபர்யயம் என்று ஐந்து விதம்; இவ்வைந்தையும் தடுத்தல் யோகம். சித்தவ்ருத்தியை அடக்குவதற்கு அப்யாஸமும் வைராக்கியமும் ஸாதனங்கள். யமம், நியமம், ஆஸநம், பிராணயாமம், பிரத்யாஹாரம், தாரணை, தியானம், ஸமாதி என்பவை யோகத்தின் எட்டு அங்கங்கள். யமம் முதலான முதல் ஐந்து அங்கங்களும் ஸமாதிக்கு பஹிரங்க ஸாதனங்கள்; தாரணை முதலிய மற்ற மூன்றும் அந்தரங்க ஸாதனங்கள்.] யோகாப்யாஸத் தில் பற்றுள்ளவர் யோக ஸம்பந்தமான விதிகளைக் கூறும் சாஸ் திரத்திலுள்ள முறைகளின்படி பக்தி சிரத்தையோடு அதைச் செய்ய வேண்டும்; அப்பொழுது சப்தம், ரூபம், இரஸம், கந்தம், பரிசம் என்கிற விஷயங்களில் நேத்திராதி இந்த்ரியங்கள் சிறிதும்

எதிரிலிருப்பது எதுவும் அவளுக்குப் புல்ப்படாமல் அவளது பார்வை பாழ்த்துச் சூனியமாயிருக்கும்; மேன் மேலும் பெருமூச்செறிந்தவண்ணம் இருப்பள்; அவளது தாமரை மலர்போன்ற முகம் வாடிச் சுருங்கிக் காணும்; கண் இயங்காதபடி அவற்றை அடக்கிப் போடுவார்கள்; ஆகவே மனது எங்கும் செல்லாதபடி தடுக்கப்பட்டு அதற்குச் சாந்தி ஏற்படும். அப்பொழுது தியானிக்க வேண்டிய சுபாச்ரயம் என்னும் சிறந்த தத்துவத்தில் மனதைப் பற்றவைத்துத் தியானத்தை இடையறாது விழும் நீர்த்தாரைபோல் நிகழ்த்துவது முறை. அது போலவே பிரக்ருதத்தில் ஸீதையானவள் காமசாஸ்திரத்தின் விதிப்படி வேறெதிலும் தன் நேத்திராதி இந்த்ரியங்கள் செல்லாதபடி தடுத்துத் தன் பதியான இராமனிடமே மனதைப் பற்றவைத்து அரியதோர் யோகநிஷ்டையில் இருந்து வருவது போலத் தோற்றும் என்று இராமன் கூறுகிறார். தியானம் செய்பவர் தியானத்துக்கு இலக்கான சுபாச்ரயவஸ்துவோடு ஐக்கியப்பட்டிருப்பதாக ஏற்படும் அரிய உணர்ச்சிரூபமான யோகத்தை நிர்விகல்பஸமாதி என்பர். அவ்விதம் ஸீதைக்கு இராமன் விஷயமான உணர்ச்சி யேற்பட்டிருப்பதாகப் பத்தியத்தின் கருத்து.

மைதிலீ வர்ணினீ ராகேந்தோர் மநோஜ்ஞம் வக்த்ரம்
வஹந்தீ ஸா ஸகாமேவ மந்யே மதிஸ்தஸ்ய ஸர்வாத்மநா வை
